## அல்லாஹ்வின் கட்டளை

رَبَّنَا لَا تُزِغْ قُلُوْبَنَا بَعْدَ اِذْ هَدَيْتَنَا
وَهَبْ لَنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً
اِنَّكَ اَنْتَ الْوَهَّابُ

எங்கள் இறைவா! நீ எங்களுக்கு நேர்வழி காட்டியதன் பின்னர் எங்கள் உள்ளங்களைக் கோணலாக்காதிருப்பாயாக. எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவாயாக. நிச்சயமாக நீயே வாரி வழங்குபவனாவாய். (3:9)


بسم الله الرحمن الرحيم    نحمده ونصلي على رسوله الكريم    وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 1-2

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

26 ரபீவுஸ் ஸானி 03 ஜமாதியுல் அவ்வல் 1440 ஹிஜ்ரி கமரி 03-10 சுலஹ் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி 03-10 ஜனவரி 2019


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**மஸீஹ் மரணித்து விட்டார். அவரது கல்லறை ஸ்ரீநகர் கான்யார் வீதியில் இருக்கிறது என்பதுதான் உண்மை**

**இனி ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஒருபோதும் வானத்திலிருந்து இறங்கி வரமாட்டார் என்பதை நீங்கள் ஞாபகம் வையுங்கள். ஏனெனில் فَلَمَّا تَوَفَّيْتَنِيْ அதாவது எப்போது நீ என்னை மரணிக்கச் செய்தாயோ (5:118) என்ற திருவசனத்தின் மூலமாக கியாமத்தென்னும் இறுதிநாளில் அவர் கொடுக்க இருக்கும் ஒப்புதல் வாக்குமூலத்தில் மீண்டும் இவ்வுலகிற்கு அவர் வரமாட்டார் என்பதை அவர் ஒப்புக் கொண்டிருப்பது தெளிவாகக் காணப்படுகிறது**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் [நூஹ் நபியின் கப்பல்] என்ற நூலிலிருந்து...**

நீங்கள் பலவந்தத்தை உபயோகிப்பீர்களேயானால் உங்களது உண்மைக்கு எவ்வித ஆதாரமும் உங்களிடம் இல்லை என்பதற்கு இந்த பலவந்தமே போதுமான ஒரு அத்தாட்சியாகும். எப்போது ஒவ்வொரு அறிவீனனும் நெறிதவறியவனும் எவ்வித ஆதாரமும் காட்ட முடியாமல் தோல்வியைக் காண்பானோ அப்போது அவன் வாள் அல்லது துப்பாக்கியின் பக்கம் தனது கரங்களை நீட்டுகிறான்.

ஆனால் வேறு வழி இல்லாமல் வாளின் உதவியைக் கொண்டு பரவக்கூடிய ஒரு மதமானது ஒருபோதும் இறைவன் புறமிருந்து வந்திருக்க முடியாது. நீங்கள் இவ்வாறான ஜிஹாது என்னும் அறப்போரைக் கைவிடாமல் அதன்மீது ஆவேசமுற்று உண்மையாளருக்குத் தஜ்ஜால் (பொய்யன்), முல்ஹித் (மார்க்கமிழந்தவன்) என்று பெயர் சூட்டுவீர்களேயானால் பின்னர் நாம் قُلْ يٰۤاَيُّهَا الْكٰفِرُوْنَ لَآ اَعْبُدُ مَا تَعْبُدُوْنَ அதாவது கூறுவீராக! நிராகரிப்பவர்களே! நீங்கள் வழிபடும் விதத்தில் நான் வழிபட மாட்டேன். (109:2,3) என்னும் இவ்விரண்டு வசனங்களைக் கொண்டே இவ்வுரையை நாம் முடித்துக் கொள்கிறோம்.

உங்களிடையே வேற்றுமையும் விரோதமும் இருந்து வரும் இக்காலத்தில் உங்களது மஸீஹும் போலி மஹ்தியும் யாரையெல்லாம் வாளால் தாக்குவார்கள்? சுன்னிகள் கருத்தின்படி ஷியாக்கள் வாளால் தாக்கப்படுவதற்குத் தகுதியுள்ளவர்களில்லையா? ஷியாக்களின் கருத்தின்படி சுன்னிகள் அனைவரும் வாளால் அழிக்கப்படுவதற்குத் தகுதியுள்ளவர்களில்லையா?

ஆகவே உங்களின் நம்பிக்கையின்படி உங்களிலுள்ள பிரிவினர்களே தண்டனைக்குத் தகுதியுள்ளவர்களாகயிருக்கையில் நீங்கள் யார் யாரிடமெல்லாம் ஜிஹாது செய்வீர்கள்? ஆனால் இறைவனுக்கு வாள் தேவை இல்லை என்பதனை நினைவில் கொள்ளுங்கள். அவன் தனது மார்க்கத்தை வானத்தின் அடையாளங்களைக் கொண்டு பூமியின் மீது பரவச் செய்வான். அதனை எவராலும் தடை செய்யவே முடியாது.

இனி ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஒருபோதும் வானத்திலிருந்து இறங்கி வரமாட்டார் என்பதை நீங்கள் ஞாபகம் வையுங்கள். ஏனெனில் فَلَمَّا تَوَفَّيْتَنِيْ அதாவது எப்போது நீ என்னை மரணிக்கச் செய்தாயோ (5:118) என்ற திருவசனத்தின் மூலமாக கியாமத்தென்னும் இறுதிநாளில் அவர் கொடுக்க இருக்கும் ஒப்புதல் வாக்குமூலத்தில் மீண்டும் இவ்வுலகிற்கு அவர் வரமாட்டார் என்பதை அவர் ஒப்புக் கொண்டிருப்பது தெளிவாகக் காணப்படுகிறது.

மேலும் கிறித்தவர்கள் கெட்டழிந்து போனதைக் குறித்து நான் ஒன்றும் அறியேன் என்பதே இறுதி நாளில் தம் வாயால் அவர் கூறும் காரணமாகும்.கியாமத்துக்கு முன் அவர் உலகிற்கு வந்திருந்தால் கிறித்தவர்கள் கெட்டுப் போனதைக் குறித்து நான் ஏதும் அறியேன் என்ற இப்பதிலையா அவர் அளித்திருப்பார். இதனால் அவர் மீண்டும் உலகிற்குப் போகவில்லை என்பதை இத்திருவசனம் மூலமாக அவர் தெளிவாக ஒப்புக் கொண்டிருக்கிறார்.

மேலும் அவர் கியாமத்துக்கு முன் வரக்கூடியவராகவும் சரியாக நாற்பது ஆண்டுகள் (ஆட்சி புரிபவராகவும்) இருந்தால் எனக்கு கிறிஸ்தவர்களின் நிலைமைகள் பற்றி ஒன்றுமே தெரியாது என்று கூறுவதென்பது இறைவன் முன்னால் அவர் பொய் கூறியதாகி விடும். இதற்கு மாறாக எனது இரண்டாவது வருகையின் போது ஏறக்குறைய நாற்பது கோடி கிறிஸ்தவர்கள் உலகில் இருந்தார்கள். அவர்கள் அனைவரையும் கண்டேன். அவர்கள் கெட்டுப் போனதைக் குறித்து நான் நன்றாய் அறிவேன். எல்லா கிறிஸ்தவர்களையும்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**காலத்தின் கலீஃபாவின் சுற்றுப் பயணத்தின் மூலமாக மூன்று பெரும் பலன்கள் ஏற்படுகின்றன. (1) அந்த நாடுகளில் படித்தறிந்த மக்கள் மற்றும் செல்வாக்குமிக்க நபர்களோடு தொடர்பு ஏற்படுகின்றது. (2) ஊடகங்கள் மூலமாக இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் அறிமுகம் மற்றும் உண்மையான போதனை மக்களுக்குத் தெரிய வருகின்றது. (3) ஜமாஅத் மக்களோடு தனிப்பட்ட தொடர்பு மற்றும் அறிமுகம் ஏற்படுகின்றது. இதன் காரணமாக அவர்களது ஈமான், கலப்பற்ற தன்மை, அன்பு, நேசத்தின் தொடர்பில் முன்னேற்றம் ஏற்படுகிறது**

**உலகப் பிரச்சனைகளுக்கு இஸ்லாம்தான் தீர்வு வழங்க முடியும். அமைதி மற்றும் சமாதானத்தையும் இஸ்லாத்தால் மட்டுமே ஏற்படுத்த முடியும். மாறாக, சமூக பிரச்சனைகளுக்கான தீர்வுகளுக்கும் இஸ்லாமே வழிகாட்டுகிறது**

**இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை அமெரிக்காவிலும், மற்ற நாடுகளிலும் பெரும் முயற்சியுடனும், சரியான முறையிலும் கொண்டு சேர்ப்பது நமது பணியாகும்**

**இது ஒரு வியக்கத்தக்க தூதுச் செய்தியாகும். உங்களது ஒவ்வொரு சொல்லும் உள்ளத்தைத் தொட்டது.**

**அமெரிக்காவின் சுற்றுப் பயணத்தில் அல்லாஹ்வின் அருளால் ஹுஸூர் அவர்கள் மூன்று பள்ளிவாயில்களைத் திறந்து வைத்தார்கள். மேலும் குவேட்டேமாலாவில் நாஸிர் மருத்துவமனையையும், ஸ்பேனிஸ் மொழியில் Review of Religion பத்திரிகையையும் துவக்கி வைத்தார்கள்**

**கிலாஃபத் மீது ஆழ்ந்த அன்பு கொண்டிருந்த, கலப்பற்ற அஹ்மதியான புர்கினோஃபாஸோவைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஸாவாதோகோ இஸ்மாயீல் (Sawadogo Ismail) ஸாஹிபின் நற்குறிப்பை எடுத்துக் கூறியவாறு அன்னாரது ஜனாஸா காயிப் தொழுகையை ஹுஸூர் அவர்கள் தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 16 நவம்பர் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **16 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த ஜுமுஆ அன்று தஹ்ரீகே ஜதீதின் புதிய ஆண்டிற்கான அறிவிப்பின் காரணமாக நான் கடந்த நாட்களில் அமெரிக்காவுக்கும் குவேட்டேமாலாவிற்கும் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின் விவரங்களை எடுத்துக் கூறவில்லை. அல்லாஹ்வின் அருளால் சுற்றுப் பயணங்களுக்கு நல்ல நேர்மறையான தாக்கங்கள் வெளிப்படுகின்றன. நம்மவர்களோடும் அந்நியர்களோடும் ஏற்படும் தொடர்பின் அடிப்படையிலும் ஜமாஅத்தின் அமைப்பு ரீதியிலும் நேரடியாக பார்ப்பதன் மூலமாக நிறைய விஷயங்கள் எனது தெரிய வருகின்றது.

மூன்று பெரும் பலன்கள் என்னவென்றால், இந்த நாடுகளில் படித்தறிந்த மக்களோடும் செல்வாக்குமிக்க நபர்களோடும் தொடர்பு ஏற்படுகின்றது. அது சந்திப்பு ரீதியிலும் சரி; அல்லது பள்ளிவாயில்களின் திறப்பு விழாவாக இருந்தாலும் சரி; அல்லது வரவேற்பு நிகழ்ச்சியாக இருந்தாலும் சரியே. இரண்டாவது ஊடகங்கள் மூலமாக இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் அறிமுகம் மற்றும் உண்மையான போதனை மக்களுக்குத் தெரிய வருகின்றது.

மூன்றாவது பெரிய விஷயம் என்னவென்றால், ஜமாஅத் மக்களோடு தனிப்பட்ட தொடர்பும் அறிமுகமும் ஏற்படுகின்றது. இதன் காரணமாக அவர்களது ஈமான், கலப்பற்ற தன்மை, அன்பு, நேசத்தின் தொடர்பில் முன்னேற்றம் ஏற்படுகிறது. மேலும் காலத்தின் கலீஃபாவும் ஜமாஅத் உறுப்பினர்களும் பரஸ்பரம் நேரடியாக சந்திப்பதன் மூலமாகவும், பார்ப்பதன் மூலமாகவும், கேட்பதன் மூலமாகவும் அசாதாரணமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. உணர்வுப் பூர்வமாகவும் இருக்கின்றது.

பிறகு அந்த நாடுகளில் இருக்கக்கூடிய சூழ்நிலைகளுக்கேற்ப நேரடியாக குத்பாக்களில் அவர்களுக்குச் சில விஷயங்களைக் கூறவும் முடிகிறது. அமெரிக்காவின் இந்த சுற்றுப் பயணத்தின்போது மூன்று பள்ளிவாயில்கள் திறப்பதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. அல்லாஹ் இந்த பள்ளிவாயில்களை எப்பொழுதும் தொழுகையாளிகளால் நிரப்பிக் கொண்டே இருப்பானாக. மேலும் ஜமாஅத் மக்களின் கலப்பற்ற தன்மை பற்றுவிசுவாசத்தையும் அதிகரிக்கச் செய்வானாக. குழந்தைகள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் ஆண்கள் நான் சென்ற இடங்களிலெல்லாம் ஃபிளடெல்ஃபியாவிலும் சரி, ஹோஸ்டனிலும் சரி, பிறகு வாஷிங்டனிலும் சரி அவர்கள் தங்களது அதிக நேரங்களை பள்ளியின் சூழலியே கழித்தனர். குழந்தைகளின் பெற்றோர்களும் உறவினர்களும் இப்போதும் கடிதம் எழுதிக் கொண்டிருக்கின்றனர். அதாவது தாங்கள் வந்திருந்தபோது பள்ளிக்கு சீக்கிரம் செல்ல வேண்டும் என்று குழந்தைகள் அழுத்தம் கொடுத்து வந்தனர். கிலாஃபத்தோடு அவர்களுக்கு இருக்கக்கூடிய தொடர்பை அவர்கள் வெளிப்படுத்தினர். பின்னர் பள்ளிவாயிலுக்கு வந்து பெரும்பாலான நேரம் பள்ளியிலேயே கழித்தனர்.

அமெரிக்காவில் இம்முறை புகலிடம் பெறக்கூடியவர்கள் மேலும் அகதிகளாக வந்துள்ள பாகிஸ்தானியர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. இவர்கள் மிகக்கடினமான நிலைமைகளைக் கடந்து மலேஷியா, தாய்லாந்து, ஸ்ரீலங்கா மற்றும் நேபாளத்திலிருந்து வந்திருந்தனர். அவர்களை சந்தித்ததும் கூட சில வேளைகளில் உணர்ச்சிவசப்படுத்தியது. சிலர் மிக அதிகமாக உணர்ச்சிவசப்பட்டு விட்டனர். இவர்களுக்கு இங்கு வசதிகளை அல்லாஹ் ஏற்படுத்திக் கொடுப்பானாக. அதே வேளையில் அவர்களிடம் உலகை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்ற உணர்வு மேலோங்கி இருக்கட்டுமாக. உலகப் பொழிவுகளில் மூழ்காதிருப்பார்களாக.

இப்போது சுற்றுப் பயணம் தொடர்பான மேலும் சில விஷயங்களையும் எடுத்துக் கூறுகிறேன். பொதுவாக அமெரிக்க அரசியல் தலைவர்களும், படித்தறிந்த மக்களும், பொது மக்களும் பேச்சைக் கேட்கக் கூடியவர்களாகவும், நல்ல விஷயங்களைப் புகழக் கூடியவர்களாகவும் இருக்கின்றனர். இஸ்லாத்தின் உண்மையான போதனை அவர்கள் வரை சரியான முறையில் சென்றடையவில்லை. எவர்கள் வரை சென்றடைந்துள்ளதோ, மேலும் எவர்களுக்கு ஜமாஅத்துடன் தொடர்பு இருக்கின்றதோ அவர்கள் இஸ்லாம் தொடர்பாக நல்ல கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர்.

எனவே இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை அமெரிக்காவிலும் சரி; உலகிலும் கடின உழைப்போடும் சரியான முறையில் எடுத்துச் செல்வது நமது கடமையாகும். இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தி முஸ்லிம் அல்லாதவர்களுக்குக் கண்களை திறக்கக்கூடிய

அதே வேளையில் இஸ்லாத்தின் அழகும் அமைதியும் நிறைந்த போதனையைத் தெளிவாக்கக்கூடிய அதே வேளையில் முஸ்லிம்களுக்கும் நம்பிக்கையூட்டுகின்றது. ஜமாஅத் அல்லாத முஸ்லிம்களுக்கு உண்மையான இஸ்லாம் என்றால் என்ன? என்று தெரிய வருகின்றது.

எனவே தாழ்வுமனப்பான்மை கொள்ள வேண்டிய தேவையில்லை. பெரும்பாலான இடங்களில் அனுபவ ரீதியில் உணர்ந்தது என்னவென்றால் அது அமெரிக்காவிலும் சரியே! அதாவது ஜமாஅத் அல்லாத முஸ்லிம்கள் நம்மிடமிருந்து இஸ்லாத்தின் அழகிய போதனைகளைக் கேட்கும்போது அவர்களிடத்தில் ஒரு நம்பிக்கை பிறக்கின்றது. அதாவது நாம் எந்த தாழ்வுமனப்பான்மைக்கும் ஆளாக வேண்டியதில்லை என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது. இதை அவர்கள் வெளிப்படுத்தவும் செய்தனர். மாறாக, உலகப் பிரச்சனைகளுக்கு இஸ்லாம்தான் தீர்வு வழங்க முடியும். அமைதியையும் சமாதானத்தையும் இஸ்லாத்தால் மட்டுமே ஏற்படுத்த முடியும்.

மாறாக, சமூக பிரச்சனைகளுக்கான தீர்வுகளுக்கும் இஸ்லாமே வழிகாட்டுகிறது. ஜமாஅத்தைச் சாராத சில மக்கள் அதாவது நமது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்கள் கூறுவதாவது, நீங்கள் எடுத்துரைக்கின்ற இஸ்லாத்தின் அழகிய போதனைகளே உண்மையான வழியாகும். முஸ்லிம் அல்லாதவர்கள் இந்த தூதுச் செய்தியைக் கேட்டு வியப்பிற்கு ஆளாகின்றனர். மேலும் தமது கருத்துக்களையும் கூறுகின்றனர். அதாவது இதுதான் இஸ்லாமிய போதனை என்றால் நிச்சயமாக இவை வெற்றி பெறக்கூடிய போதனைகளாகும் என்கின்றனர். சில விருந்தினர்களின் நற்தாக்கங்களையும் எடுத்து வைக்கின்றேன்.

ஃபிளடெல்ஃபியாவில் பைத்துல் ஆஃபியத் பள்ளிவாயில் திறப்பு விழாவின்போது அமெரிக்க காங்கிரஸின் உறுப்பினரான மதிப்பிற்குரிய டிவாய்ட் ஈவன்ஸ் (Hon.Dwight Evans) வந்திருந்தார். அவர் என்னைப் பற்றி நான் உங்களை இந்த நகரத்திற்கு வரவேற்கிறேன். இந்த நகரம் சகோதர சகோதரிகளின் நேசத்திற்கான நகரமாகும். ஃபிளடெல்ஃபியாவின் அமைப்பு தரப்பிலிருந்து நான் முஸ்லிம் சமூகத்திற்கு கூற விரும்புவதாவது, உங்களுடைய அமைதியின் தூதுச் செய்தியை நாங்கள் வரவேற்கின்றோம்.

பிறகு கூறுகின்றார்: சில அமெரிக்கர்களின் தரப்பிலிருந்து இந்த காலகட்டத்தில் இஸ்லாத்திற்கெதிராக சில கருத்துக்கள் வந்திருக்கின்றன. ஆனால் நான் உங்களிடம் கூற விரும்புவது என்னவென்றால், இங்குள்ள பெரும்பான்மை உங்களை வரவேற்கின்றது. நாங்கள் உங்களுடன் இருக்கின்றோம். வெறுப்பு மற்றும் தீவிரவாதத்திற்கு எதிராக நிற்கின்றோம் என்றார்.

பிறகு கூறினார்: அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக நீங்கள் மிகச்சிறந்த தூதுச் செய்தியை வழங்கியுள்ளீர்கள். துரதிஷ்டவசமாக நாங்கள் அமெரிக்காவில் ஒரு இருளான காலகட்டத்தைக் கடந்து கொண்டிருக்கின்றோம். இப்படிப்பட்ட காலத்தில் இந்த தூதுச் செய்தி மிகவும் மகத்தானதாகும். இதிலிருந்து, முஸ்லிம் சமூகம் அமெரிக்காவில் மட்டுமின்றி முழு உலகிற்கும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்பது நிரூபணமாகிறது. நமக்கு எதிர்காலத்தில் அமைதி தேவை.

ஃபிளடெல்ஃபியாவிற்கு மார்க்க சுதந்திரம் தொடர்பாக ஒரு முக்கியத்துவம் இருக்கின்றது. அதாவது ஒவ்வொரு மார்க்கத்தினருக்கும் இங்கு வசிப்பதற்கான மார்க்க சுதந்திரம் இருக்கின்றது. ஒரு முக்கியத்துவம் இருக்கின்றது. உங்களுடைய பள்ளிவாயில் இதற்கு மகத்தான அந்தஸ்தாக விளங்கும்.

இது அவர்களின் கருத்தாகும். அந்த நகரத்தின் மேயரும் கூட வந்திருந்தார். வேறு சில பொறுப்பாளர்களும் வந்திருந்தனர்.

பிறகு மேயர் ஜேம்ஸ் கேனினும் (James Kenney) கூட இதையே கூறினார்: ஃபிளடெல்ஃபியா நகரின் வரலாற்றிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், மார்க்க சுதந்திரம் இந்த நகரத்தின் அடிப்படை விஷயங்களில் ஒன்றாகும். இதன் அடிப்படையில்தான் இந்த நகரம் கட்டமைக்கப்பட்டது. நாம் பல்வேறு சமுதாயம் மற்றும் தலைமுறையினராக இருந்தாலும் இந்த நகரம் அனைவருக்கும் நல்வரவு கூறும்.

பிறகு அவர் கூறினார்: நாம் ஒருவர் மற்றவரோடு இணைந்து பணியாற்ற வேண்டும். ஒருவர் மற்றவரோடு கண்ணியத்தோடு நடந்து கொள்ள வேண்டும். நாம் ஒன்றிணைந்து வாழ முடியும் என்று உலகிற்குப் பறைசாற்ற வேண்டும். மேலும் நாம் நமது பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டு வர முடியும். நமது குழந்தைகளின் பிரச்சனைகளையும் முடிவுக்கு கொண்டு வர முடியும்.

உண்மையில் இந்த போதனை இஸ்லாமிய போதனையாகும். இதனை அந்நியர்கள் பேணுகின்றார்கள். முஸ்லிம்களோ மறக்கின்றனர்.

பிறகு அந்த நிகழ்ச்சியில் ஒரு நீதிபதி ஹேரி ஷவார்டஸ் (Harry Schwartz) கலந்து கொண்டார். அவர் கூறுகிறார்: இந்த ஜமாஅத்தை நான் கடந்த 25 வருடங்களாக அறிந்திருக்கின்றேன். பலமுறை உலகின் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக சத்ர் சாஹிபிடம் பேசி இருக்கின்றேன்.

என்னுடைய சொற்பொழிவிற்குப் பிறகு கூறுகிறார்: இந்த தூதுச் செய்தி அமைதி, சமாதானம் மற்றும் ஒன்றாக இருப்பதற்கான தூதுச் செய்தியாகும். இதை நாம் புரிந்து விட்டால் நாம் அனைவரும் நல்ல நிலையில் இருப்போம் என கருதுகிறேன்.

ஒரு ஆப்ரிக்கன் அமெரிக்கன் புதிய முஸ்லிம் கூறுகிறார்: இங்கு பள்ளிவாயிலின் தேவை அதிகமாக இருந்தது. இது ஒரு நல்ல சென்டராக ஆகிவிட்டது. ஒரு சூழலை சிறந்ததாக்குவதற்கு பத்து வருடங்கள் தேவைப்படுகிறது என்று கூறப்படுகிறது. ஆனால் இரண்டே வருடத்தில் இங்கு சூழல் சிறந்ததாக ஆனதை நான் கண்டுள்ளேன். இதிலிருந்து ஒரு பற்று இருக்கும் என்றால் ஒன்றிணைந்து பணி செய்ய முடியும் என்பது நிரூபணமாகிறது.

பிறகு சொற்பொழிவு தொடர்பாக, இது ஒரு வியப்பிற்குரிய தூதுச் செய்தி என்று குறிப்பிட்டார். உங்களுடைய ஒவ்வொரு விஷயமும் உள்ளத்தில் நற்தாக்கத்தை ஏற்படுத்தியது என்கின்றார். இவர் அஹ்மதி அல்ல. ஆனால் முஸ்லிம்.

பிறகு ஒரு ஆப்ரிக்கன் அமெரிக்க பெண்மணி கூறுகிறார்: சொற்பொழிவிலிருந்து கற்பதற்கு நிறைய கிடைத்தது. அவைகளை நாங்கள் எங்களின் வாழ்க்கையின் அங்கமாக ஆக்குவோம் என நம்புகிறோம். இதன்படி செயல்பட்டால் நிச்சயமாக நாம் நேரான வழியில் இருப்போம் என்றார்.

இந்த பெண்ணும் அஹ்மதி அல்ல.

பிறகு இன்னொரு பெண்மணி ஹானியா (Haniyyah) சாஹிபா கூறுகின்றார்: தாங்கள் வழங்கிய தூதுச் செய்தி மூலமாக இஸ்லாத்திற்கெதிராக ஏற்படுத்தப்படும் தவறான எண்ணங்கள் களையப்படும். முஸ்லிம்களின் ஒரு சென்டர் இங்கு உருவானது மிக்க மகிழ்ச்சி. மக்களிடம் இஸ்லாத்தின் மீது ஒரு வெறுப்பு காணப்படுகிறது. ஆனால் இது முழுக்க முழுக்க தவறானதாகும். தங்களுடைய தூதுச் செய்தி உறுதியானதாக இருந்தது. இந்த தூதுச் செய்தி அதிகம் அதிகமாக பரவ வேண்டும் என்றும் அமெரிக்க மக்கள் இஸ்லாத்தைப் பற்றி அறிய வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறேன்.

ஒரு உள்ளூர் கவுன்சிலர் கலந்து கொண்டார். பள்ளிவாயில் திறப்பு விழாவிற்கு வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: உங்களின் அமைதியின் தூதுச் செய்தி மிக அவசியமானதாக இருந்தது. தற்காலத்து சூழ்நிலைகளில் இந்த தூதுச் செய்தி மேலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆகி விட்டது. நான் இங்கு வந்தது எனக்கு மிகவும் பெருமைக்குரிய விஷயமாகும். நான் இந்த பள்ளிவாயிலை கட்டப்படுவதை என் கண் முன் கண்டேன். இங்கு இந்த பள்ளிவாயில் நிறுவப்பட்டிருப்பது இங்குள்ள மக்களின் பல அருள்களுக்கு காரணியாக இருக்கின்றது. தாங்கள் வழங்கிய தூதுச் செய்தி அதாவது அண்டை அயலாரின் தேவையின் போது அவர்களோடு தோளோடு தோள் நிற்போம் என்று கூறியதும் ஃபிளடெல்ஃபியாவிற்கு மட்டுமின்றி முழு அமெரிக்காவிற்கும் தேவையான தூதுச் செய்தியாகும்.

பாலஸ்தீனத்தைச் சார்ந்த ஒரு முஸ்லிம் பெண்மணி கலந்து கொண்டிருந்தார். அவர் கூறுகின்றார்: உங்களுடைய தூதுச் செய்தி மிக

முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. நான் பாலஸ்தீனத்தின் ஒரு சிறிய கிராமத்தைச் சேர்ந்தவள். நான் சிறு வயதில் கற்ற உண்மையான போதனைகளை இங்கு உங்களது சொற்பொழிவில் பார்க்க முடிந்தது. இதுவே உண்மையான இஸ்லாம் ஆகும். நாம் எந்த பிரிவைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி அமைதியை ஏற்படுத்த ஒன்றிணைந்து பணியாற்றுவது நமது கடமையாகும் என்றார்.

பிறகு கூறுகின்றார்: நீங்கள் உண்மையான முறையில் அனைத்து முஸ்லிம் சமுதாயங்களின் பிரதிநிதித்துவத்தை செய்துள்ளீர்கள்.

இது நல்லியல்பு கொண்ட மக்களின் கருத்தாகும். மற்ற முஸ்லிம்களும் இந்த விஷயத்தைப் புரிந்தால் நன்றாக இருக்கும். அஹ்மதிய்யா ஜமாஅத்தான் உண்மையில் இஸ்லாத்தின் பிரதிநிதியாக இருக்கின்றது.

ஒரு பெண் ஆசிரியை கூறுகின்றார்: உங்களுடைய தூதுச் செய்தி அமைதியின் தூதுச் செய்தி. மிகவும் மகத்தானதாக இருந்தது. நான் ஒரு கத்தோலிக்க கிறித்தவளாவேன். ஆனால் ஒவ்வொரு வார்த்தையுடனும் நான் உடன்படுகின்றேன். மேலும் இஸ்லாம் அமைதியின் தூதுச் செய்தியை வழங்குகின்றது என்றும் மனித குலத்திற்குத் தொண்டாற்றும் பாடத்தைத் தருகிறது என்றும் நான் உறுதியாக கூறுகின்றேன்.

ஒரு பேராசிரியர் அவர் தமது பல்கலைக்கழகத்தின் தலைவரின் பிரதிநிதியாக கலந்து கொண்டார். அவர் கூறுகிறார். தாங்கள் இந்த நகரத்தின் மக்களுக்காக வெளிப்படுத்திய நல்லெண்ணங்களுக்கு நிகழ்காலத்தோடு மட்டுமின்றி எதிர்காலத்திற்கும் தொடர்பு இருக்கின்றது. உங்களிடத்தின் நான் கண்ட இன்னொரு விஷயம் என்னவென்றால், நீங்கள் தற்காலத்தைப் பற்றிய விஷயத்தை மட்டும் பேசவில்லை. மாறாக, உங்களின் பார்வை எதிர்காலத்தைப் பற்றியதாகவும் உள்ளது.

பிறகு இன்னும் நல்ல வார்த்தைகளால் வெகுவாக புகழ்ந்தார். அவர் கூறுகின்றார்: நீங்கள் இங்கு ஒரு விதையை விதைத்திருக்கின்றீர்கள். அதைப் பாதுகாப்பதும், வளர்ப்பதும், அதனைச் சகோதரத்தும் மற்றும் அன்பின் உறுதியான மரமாக மாற்றுவது எங்களது பணியாகும்.

ஒரு பெண்மணி தனது உணர்வுகளை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்: நாங்கள் உங்களுடைய கண்ணீரைத் துடைப்போம் என்று தாங்கள் கூறியுள்ளீர்கள். எத்தனை நபர்களால் இதனைக் கூற முடியும்? இது மிகவும் வியப்பான ஒன்றாக இருந்தது. என்னால் எனது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஒரு தூதுச் செய்தியை வழங்குவதற்கு உரத்த குரலிலும், உணர்ச்சிப் பொங்கச் சொற்பொழிவாற்ற வேண்டும் என்பது அவசியமில்லை. தாங்கள் தூதுச் செய்தியை மிகுந்த நேசத்தோடும், அன்பான தொனியிலும் வழங்கியுள்ளீர்கள்.

நான் அவர்களிடம், ஏழைகளுக்கு உதவி செய்வதற்கு நாங்கள் எல்லா நேரங்களிலும் ஆயத்தமாக இருக்கின்றோம். மேலும் ஏதேனும் கஷ்டம் என்றால் நாங்கள் உங்களின் கண்ணீரைத் துடைக்கக் கூடியவர்களாகவும் இருப்போம் என்று கூறியிருந்தேன்.

அஹ்மதியல்லாத ஓர் இமாம் சாஹிப் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தார். அவர் கூறினார்: ஜமாஅத் தரப்பிலிருந்து செய்யப்பட்டிருந்த திருக்குர்ஆன் மொழியாக்கத்தின் காரணமாக முதல் முறையாக அஹ்மதிகளோடு தொடர்பு ஏற்பட்டது. அதாவது இவரிடத்தில் மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அவர்களின் மொழியாக்கம் இருக்கின்றது. பிறகு கூறுகிறார்: தங்களின் தூதுச் செய்தி சிறந்ததாக இருந்தது. நான் தாங்களுடன் நூறு சதவிகிதம் உடன்படுகின்றேன். இதுவே நமது இலக்கும் நோக்கமும் ஆகும். நாம் அனைவரும் ஆதமின் சந்ததிகளாவோம். மேலும் நாம் பரஸ்பரம் ஒருவர் மற்றவரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத் தூதுச் செய்தியை பரப்ப வேண்டும்.

அல்லாஹ் இதை அவருடைய வார்த்தையாக மட்டுமல்லாமல் செயல்படுத்தக் கூடியவராக ஆக்குவானாக.

பிறகு பால்ட்டிமோரின் (Baltimore) பள்ளிவாயில் திறப்பு விழா நடந்தது. அதன் பெயர் பைத்துஸ் ஸமது ஆகும். மேலும் இதுவும் ஒரு கிறித்தவ பேராலயத்தன் கட்டடமாக இருந்தது. அது வாங்கப்பட்டது. மேலும் பிறகு அதை சரி செய்து பள்ளிவாயிலாக மாற்றப்பட்டது. மேலும் எதேச்சையாக ஏறக்குறைய 99.9 சதவிகிதம் இந்த கட்டடம் கிப்லாவை நோக்கி அமைந்திருக்கின்றது. இந்த அடிப்படையில் மாற்றம் செய்யப்பட வேண்டிய தேவையில்லை. இந்த பள்ளி தொடர்பான நான் விவரங்களை அங்கு நான் குறிப்பிடவில்லை. எனவே நான் சிறிதளவு அதன் விவரத்தையும் எடுத்துரைக்கின்றேன்.

20 லட்சம் டாலரில் இது வாங்கப்பட்டது. இதில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே ஹால்கள் உள்ளன. அதில் 400 பேர் தொழ முடியும். இது தவிர அலுவலகங்கள் இருக்கின்றன. Library உள்ளது. Class Rooms இருக்கின்றன. Commercial Kitchen, Dining Hall உள்ளது. Highway ல் அமைந்துள்ளது. இந்த Highway ல் தினசரி 45,000 வாகனங்கள் கடந்து செல்கின்றன.

பால்ட்டிமோரின் மேயர் வரவேற்பு நிகழ்ச்சிக்கு வந்திருந்தார். அப்பெண் கூறுகிறார்: அமைதி தொடர்பாக தாங்கள் பேசினீர்கள். அந்த தூதுச் செய்தி இன்றைய தேவையாக இருக்கின்றது. எங்களுடைய நகரத்தில் மட்டுமின்றி முழு மாநிலம் பிறகு முழு USA விற்கும் பிறகு முழு உலகிற்கும் இந்த தூதுச் செய்தி அவசியமாகும். இந்த தூதுச் செய்தியை ஒவ்வொருவரும் கேட்க வேண்டும் நான் கருதுகிறேன். அவ்வாறு நாம் கேட்போம் என்றால் உலகப் பிரச்சனைகளுக்கான ஒரே தீர்வு அமைதி மட்டுமே என்பது நமக்குத் தெரிய வரும். மேலும் நாம் ஒருவர் மற்றவரை நேசிக்கக் கற்றுக் கொள்வோம்.

ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர் பால்ட்ரிமோரில் தமது நற்தாக்கத்தை வெளிப்படுத்தியவாறு கூறுகிறார்: நம்மிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கின்ற அதே வேளையில் நம்மிடையே நிறைய ஒருமித்த விஷயங்களும் இருக்கின்றன. இதுவொரு வியப்பான தூதுச் செய்தியாகும். இதன் மூலம் நாம் சமூகத்தில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்த இயலும். நாம் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும். பரஸ்பரம் ஒருவர் பிறருக்குக் கண்ணியம் வழங்க வேண்டும். USA வின் சூழலில் இத்தூதுச் செய்தி மிகவும் முக்கியமாகும். அமெரிக்கர்கள் என்ற அடிப்படையில் நாம் நமக்காக மட்டுமின்றி நம்முடைய குழந்தைகளுக்காகவும் பணியாற்ற வேண்டும். சமூகத்தில் அனைவரையும் அழைத்துக் கொண்டு முன்னேற வேண்டும். இந்த வியப்பிற்குரிய தூதுச் செய்தி என்னை நற்தாக்கத்தற்கு ஆளாக்கியது.

பிறகு 48 வது மாவட்டத்தின் மாநில பிரதிநிதி வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: நான் இந்த தூதுச் செய்தியைக் கேட்டு மிகுந்த தாக்கத்திற்கு உள்ளானேன். குறிப்பாக முஸ்லிம்கள் தொடர்பாக சமூகத்தில் அச்சம் காணப்படும் இவ்வேளையில் இத்தூதுச் செய்தி சிறந்ததாகும். இந்த நாட்டில் இன ரீதியான பாகுபாடுகள் உள்ளன. இப்படிப்பட்ட நிலைமையில் தாங்கள் எங்களுக்கு எங்களது பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டியது எனக்கு மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது. ஒவ்வொருவரையும் நேசிக்க வேண்டும். எவரையும் வெறுக்கக் கூடாது என்று தாங்கள் கூறினீர்கள். இந்த விஷயங்கள்தான் எங்களுக்குத் தேவை. பால்ட்டிமோர் நகரத்திற்கு அன்பு, அமைதி மற்றும் நீதி போன்றவைகளின் தேவை உள்ளது.

இப்பெண்மணியின் கணவர் கூறுகின்றார்: எனது மனைவி என்னிடத்தில் இது நமக்கு மிகவும் முக்கியமான தூதுச் செய்தி என்று கூறினார். பிறகு கூறுகின்றார்: நாமே முயற்சி செய்து சமூகத்தை எந்த அளவுக்குச் சிறந்ததாக ஆக்குவது பற்றி பேசுவதால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் இங்கு இருப்பதனால் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்த முடியாது. முஸ்லிம் சமூகமானது இங்கு மட்டுமின்றி மாறாக USA விலும் அஹ்மதிய்யா ஜமாஅத் மகத்தான பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றது.

பிறகு Father Joe என்ற ஒரு பாதிரியாரும் கலந்து கொண்டார். அவர் கூறுகின்றார்: தாங்களுடைய சொற்பொழிவில் கூறிய ஒவ்வொரு விஷயத்திலும் நான் உடன்படுகின்றேன். ஏனென்றால் பால்ட்ரிமோரில் பலமுறை நான் அஹ்மதிய்யா பள்ளிவாயிலுக்குச் சென்றுள்ளேன். தாங்கள் கூறிய அனைத்து விஷயங்களும் கடந்த சில வருடங்களில் பிற பள்ளிவாயில்களில் கண்டு வருகின்றேன்.

அதாவது அங்குள்ள குழப்பங்கள் தொடர்பாக கூறுகின்றார். பள்ளிவாயில்கள் அனைத்து சமூகத்திற்காகவும் திறந்திருக்கின்றது. பலமுறை நான் ஜுமுஆ தொழுகைக்காகச் சென்றிருக்கின்றேன். இந்த அனைத்து விஷயங்களின் செயல் வெளிப்பாட்டிற்கு நான் சாட்சியாக இருக்கின்றேன். இந்த விஷயங்களைக் கேட்டு எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. இங்கு பல்வேறு மார்க்கங்களோடு தொடர்புடையவர்கள் இங்கு இருக்கின்றார்கள். மேலும் அமைதியைப் பற்றி பேசுகின்றார்கள். இந்த தேவை நமது நகரத்திற்கு மட்டுமின்றி முழு உலகத்திற்கும் அவசியமானதாகும்.

பிறகு ஒரு பெண்மணி தனது நற்தாக்கத்தை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்: இன்றைய சூழ்நிலையில் இந்த சொற்பொழிவில் எனக்கு மிக முக்கியமான தூதுச் செய்திகள் இருந்தன. முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதவர்கள், கருப்பர்கள் வெள்ளையர்கள் இடையே இங்கு ஏராளமான வேறுபாடுகள் இருக்கின்றன. நாம் அந்த அனைத்து பிரச்சனைகளுக்கான தீர்வை காண வேண்டும். இது பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கு கண்ணியம் வழங்குவதன் மூலமாகவே சாத்தியமாகும். தாங்கள் அண்டை அயலாரைப் புகழ்ந்தீர்கள். மேலும் அண்டை அயலாரோடு நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்ற தூதுச் செய்தியை வழங்கினீர்கள். இது எனக்கு மிகவும் மகத்தானதாகும். இந்த தூதுச் செய்தியை கேட்ட பிறகு இஸ்லாம் தொடர்பாக மேலும் அறிய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டுள்ளது. தங்களுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

ஒரு மாநிலத்தின் பிரதிநிதி 41 வது மாவட்டத்தின் பிலால் அலி சாஹிப் முஸ்லிம் ஆவார். அவர் கூறுகின்றார்: தாங்கள் கூறிய தூதுச் செய்தி அனைவரிடத்திலும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. பரஸ்பர ஒற்றுமை, அன்பு நேசத்தின் சூழலை நிறுவுவதில் இந்த தூதுச் செய்தி மிக முக்கியம் வாய்ந்ததாகும். இஸ்லாம் பற்றிய அச்ச உணர்வுகளைக் களைவதற்கு இதன் மூலம் நல்ல உதவி கிடைக்கும்.

பிறகு கூறுகின்றார்: தாங்கள் தகுந்த நேரத்தில் பிரச்சனைகளுக்கான தீர்வை எங்களுக்கு வழங்கி இருக்கின்றீர்கள். குறிப்பாக இங்குள்ள நிலைமைகளில் அதாவது அரசியல் ரீதியாக போதுமான அளவு மக்களின் அறிக்கைகள் மற்றும் முயற்சிகள் முஸ்லிம்களுக்கு எதிராக உணர்வுகளை தூண்டக் கூடியதாக இருக்கின்றது. தாங்கள் இங்கு அந்த விவகாரங்கள் தொடர்பாக சிறந்த முறையில் வழிகாட்டியுள்ளீர்கள். இப்படிப்பட்ட சூழலில் ஏராளமான நுட்பமான ஞானம் நிறைந்த ஆதாரங்களோடு வழங்கி இருக்கக்கூடிய தூதுச் செய்தியை எந்தவோர் அறிவுடைய மனிதராலும் மறுக்க முடியாது.

சமூகத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கான எளிய தீர்வை நான் கற்றுள்ளேன். அதாவது நீங்கள் கூறிய படி நமது வீட்டிலிருந்து அதை ஆரம்பிக்க வேண்டும். அண்டை அயலாரோடு நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். நீங்கள் முழு உலகையும் மாற்ற வேண்டிய தேவையில்லை. தாங்கள் எவர்களைச் சந்திக்கின்றீர்களோ அவர்களுக்கு அன்பை வழங்கினால், அவர்களுக்கு தொண்டாற்றினால் பிறகு முழு சமூகமும் அமைதி நிறைந்ததாக ஆகிவிடும்.

பிறகு தாங்கள் இன்னொரு எளிய வழிமுறையையும் கூறியுள்ளீர்கள். உண்மையின் பக்கம் அழைக்குமாறு இஸ்லாம் கூறுகின்றது. உண்மையில் உண்மையின் பால் அழைத்தலானது சொந்த முன்மாதிரியே ஆகும். இதன் மூலமே உண்மையின் பால் அழைத்தல் சாத்தியமாகும்.

பிறகு கூறுகிறார்: பால்ட்டிமோரின் நிலைமைகளை எதிர்கொள்வதற்கு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மைதானத்தில் இறங்கியுள்ளது. மேலும் சமூகத்தில் நேர்மறையான பங்களிப்பை வழங்குவதற்கான தனது உறுதியை வெளிப்படுத்தி இருக்கின்றது. இது மிகவும் பின்பற்றத்தக்க முன்மாதிரியாகும்.

அல்லாஹ் அங்குள்ள ஜமாஅத்திற்கு இந்த முன்மாதிரியைக் காட்டிக் கொண்டிருப்பதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக.

பிறகு மிஷல் (Michelle) சாஹிபா ரெஸ்பிடேரியன் பேராலயத்தில் Minister ஆவார். அவர் கூறுகின்றார்: தூதுச் செய்தி மிகச் சிறந்ததாக இருந்தது. பரஸ்பர ஒற்றுமைக்கு அழுத்தம் கொடுத்தீர்கள். அச்சத்தை முடிவுக்கு கொண்டு வந்து அன்பை நிலைநாட்டுவதன் பக்கம் தாங்கள் கவனமூட்டியுள்ளீர்கள். இந்த தூதுச் செய்தி மிக முக்கியமானதாகும். பள்ளிவாயில் கட்டப்படுவதற்கான நோக்கத்தைத் தாங்கள் எடுத்துரைத்தீர்கள். இவைகளும் மிகச் சிறந்தவைகளாகும். பிறகு அண்டை அயலாரோடு நல்ல முறையில் நடந்து கொள்வது தொடர்பான போதனையையும் எடுத்துரைத்தீர்கள். எனக்கு இந்த விஷயங்கள் புதிதாகும். கிறித்தவத்தில் சொல்லப்பட்டுள்ள அன்பு, நேசம் பற்றிய போதனைகள்தான் இங்கும் இருக்கின்றது என்று எனக்கு இன்றுதான் தெரிய வந்துள்ளது. ஆனால் ஊடகங்கள் இஸ்லாம் தொடர்பாக வேறு விதமான விஷயங்களை எடுத்துரைக்கின்றன.

ஒரு வரலாற்று ஆசிரியர் டாக்டர் ஃபாத்திமா கூறுகின்றார்: USA வில் இஸ்லாம் என்பதில் Specialaisation செய்கின்றேன். இது தொடர்பான நான் USA வில் இஸ்லாம் பற்றிய வரலாற்றில் கணிசமாக பணி செய்திருக்கின்றேன். நான் ஒரு மார்க்க Scholar அல்ல. மாறாக, நான் ஒரு வரலாற்று ஆசிரியை மட்டுமே. ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் அவர்கள் இக்காலத்தில் இஸ்லாத்தை புதிப்பித்திருக்கிறார்கள் என்று தாங்கள் கூறினீர்கள். தாங்கள் கூறியதிலிருந்து எனது சிந்தனை அதன் பக்கமே திரும்பி இருக்கின்றது.

இது தொடர்பாக நான் மேலும் ஆராய்ச்சியில் முன்னேறுவேன். எனது ஆராய்ச்சியின் மையக்கரு இப்போது மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் மட்டுமல்ல. மாறாக, இஸ்லாத்திற்கு உயிரூட்டிய அன்னாரின் எழுத்துக்களும் ஆகும் என்பதை அறிந்து எனக்கு மிக்க மகிழ்ச்சி. தங்களின் தூதுச் செய்தி மிகவும் வியத்தகு தூதுச் செய்தியாக இருந்தது. தாங்கள் இஸ்லாமிய நல்லொழுக்கத்தை பிற மார்க்கங்களோடு மட்டுமின்றி மார்க்கமே இல்லாதவர்களும் கடைபிடிக்க வேண்டும் என்று குறிப்பிட்டீர்கள்.

பிறகு கூறுகின்றார்: மத, இன வேறுபாடின்றி மனித குலத்திற்காக நாம் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்ற தாங்களின் பார்வை மிகவும் சிறந்த தூதுச் செய்தியாகும். முஸ்லிம் என்ற அடிப்படையில் நாம் சந்தேகக் கண் கொண்டு பார்க்கப்படுகின்றோம். எனவே ஒரு முஸ்லிம் தரப்பிலிருந்து இஸ்லாமிய போதனைகள் எடுத்துக் கூறப்படுவது என்பது ஒரு சிறந்த முயற்சியாகும்.

பிறகு வெர்ஜினியாவின் பள்ளிவாயில் திறப்பு விழா நிகழ்ந்தது. அதன் பெயர் மஸ்ஜிது மஸ்ரூர் ஆகும். 3 நவம்பர் அன்று திறப்பு விழா நடந்தது. இதுவும் கூட ஒரு பேராலய கட்டடம் ஆகும். அது வாங்கப்பட்டது. மொத்த பரப்பளவு 17.6 ஏக்கர் ஆகும். மேலும் ஐந்து மில்லியன் டாலர் செலவில் வாங்கப்பட்டது. பிறகு சிறிதளவு மாற்றங்களோடு சற்று புதுப்பிக்கப்பட்டு மேலும் 75,000 டாலர்கள் செலவிடப்பட்டன. இதுவும் ஏறக்குறைய கிப்லா திசையில் அமைந்திருக்கக்கூடிய கட்டடமே ஆகும். இதில் 22,403 சதுர அடி கட்டடமாகும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே ஹால்கள் உள்ளன. அதில் 650 பேர் தொழ முடியும். அது தவிர 11 அறைகள் உள்ளன. அவைகள் அலுவலகங்களாக பயன்படுத்தப்படும். ஒரு Library உள்ளது. ஒரு Confernce Room மற்றும் ஒரு Commercial Room –ம் உள்ளது.

இங்கு ஒரு நண்பர் கோரி ஸ்டீவர்ட் (Corey Stewart) என்பவர் இவர் USA வின் Republican State –ன் வேட்பாளரும் ஆவார். அவர் கூறுகின்றார்: நான் கேட்ட இந்த சொற்பொழிவு உள்ளம் கவரக் கூடியதாகவும், நுட்பமான ஞானம் நிறைந்ததாகவும் இருந்தது. அமெரிக்காவிற்கும் முழு உலகிற்கும் எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்திலும் இல்லை வெறுப்பு என்ற தூதுச் செய்தியை நன்கு கேட்க வேண்டும். மேலும் அதன்படி செயல்பட வேண்டும். உலகத்தின் நிலைமைகள் சிறந்ததாக இல்லாதபோது மார்க்க சுதந்திரம் தொடர்பாக பிரச்சாரம் செய்வது மிக அவசியமானதாகும். எனவே இந்த பள்ளி எங்களுக்கு பெருமிதத்திற்குரியதாகும். ஏனென்றால், நீங்கள் நாட்டிற்காக பல பணிகள் செய்கின்றீர்கள்.

பிறகு இன்னொரு விருந்தினர் மட் வாட்டர்ஸ் (Matt Waters) ஆவார். இவரும் வெர்ஜீனியாவின் State Candidate ஆவார். அவர் கூறுகின்றார்: சொற்பொழிவைக் கேட்டேன். இன்னும் நான் இது தொடர்பாக படிப்பேன்.

வலைதளத்திலிருந்தும் விஷயங்களை அறிவேன். இஸ்லாத்தைப் பற்றி கற்பதற்கு உங்களுடைய பள்ளிவாசலுக்கு வர விரும்புவேன்.

ஒரு கிறித்துவ விருந்தினர் கூறுகிறார்: இந்த தூதுச் செய்தி தற்கால நிலைமைகளுக்கேற்ப மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. நாங்கள் அமைதியின் தூதுச் செய்தியை கேட்டோம். மிகுந்த நற்தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன்.

பிறகு 51 வது District லிருந்து வந்த பிரதிநிதி கூறுகின்றார்: தூதுச் செய்தி மிகவும் வியப்பிற்குரியதாக இருந்தது. குறிப்பாக USA வின் தற்கால நிலைமையில் இது மிகவும் மகத்தானதாகும். தாங்கள் அன்பிற்கான தூதுச் செய்தியை வழங்கினீர்கள். ஒற்றுமைக்கான தூதுச் செய்தியை வழங்கினீர்கள். தம்மை விட பிறருக்கு முன்னுரிமை வழங்கியவாறு தன்னலமின்றி தொண்டாற்றுமாறு குறிப்பிட்டீர்கள். இன்றைய அரசியல் சூழலில் எங்களுக்கு இதுபோன்ற தூதுச் செய்தி மிக அவசியமானதாகும். தன்னை விட பிறருக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்பது மிகச்சிறந்த ஆன்மீகம் நிறைந்த தூதுச் செய்தியாகும். தமது அண்டை அயலாரைக் கருத்தில் கொள்வதும், பிறருக்கு வசதி செய்து கொடுப்பதும் தனது வசதியை விட அதற்கு முக்கியத்துவம் வழங்குவதும் மிக மகத்தானதாகும். இது போன்ற சந்தர்ப்பங்களில் தனது நான் என்ற அகங்காரத்திற்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஆனால் நீங்கள் பிறருக்கு முன்னுரிமை வழங்குங்கள் என்று கூறினீர்கள்.

இதைப் போன்று இன்னொரு விருந்தினர் அலெக்ஸ் கேஸே (Alex Keisah) கூறுகின்றார்: நான் மிகுந்த நற்தாக்கத்திற்கு ஆளானேன். நான் ஒரு Holocaust Survivor (பெரும் அழிவிலிருந்து உயிர் பிழைத்தவன்) ஆவேன். மேலும் தூதுச் செய்தி மிகவும் தாக்கத்திற்குள்ளாக்கக் கூடியதாக இருந்தது. தங்களின் ஒவ்வொரு வார்த்தையும் எனது ஆன்மா வரை தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. இந்த அடிப்படையில் தங்களுடைய தூதுச் செய்தி நாம் வெறுப்போடு சண்டையிட முடியாது என்பது மிகவும் நுட்பமான ஞானம் நிறைந்ததாக இருந்தது.

வெறுப்பை களைவதற்கான ஒரே வழி அன்பை நிலைநாட்டுவதற்காக முயற்சி செய்வதே ஆகும். வெறுப்பை அன்பால் முடிவுக்கு கொண்டு வர வேண்டும். இந்த அன்பு எல்லா மார்க்கங்களுக்கிடையேயும் உருவாக்கப்பட வேண்டும். அது போன்ற அன்பின் எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன. நம்முடைய சமூகத்தில் இருக்கின்றன. தாங்களுடைய இந்த நிகழ்ச்சியும் இதற்கு உதாரணமாகும். ஆனால் இன்றைய நாட்களில் ஒரு சிலரது தவறான செயல்களை ஊடகங்கள் பெரிதுபடுத்திக் காட்டுவதைக் காண முடிகிறது. ஆனால் பரஸ்பரம் அன்பை பரப்ப வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். மிகவும் உணர்ச்சிவசப்பட்டிருந்தார். என்னையும் சந்தித்தார். முதலில் சிறிதளவு உணர்ச்சிவசப்பட்டிருந்தார். அதன் பின்னர் இத்தூதுச் செய்தி என்னை பெரும் தாக்கத்திற்கு ஆளாக்கி உள்ளது என்று கூறி அழத் தொடங்கி விட்டார்.

இன்னொரு பெண்மணி ஷெனின் சாஹிபா நியூஜெர்ஸி நகரில் சர்ஜிக்கல் கோ ஆர்டினேட்டர் ஆவார். அவர் கூறுகின்றார்: இஸ்லாத்தின் அழகிய போதனை பற்றி மீண்டும் ஒருமுறை எடுத்துரைக்கப்பட்டது. சில தனி நபர்களின் தவறான செல்களின் காரணத்தால் முழு மார்க்கத்தை குற்றம் சாட்டுவது ஒரு அநீதியை விட குறைந்ததில்லை என்பதுதான் எனது கருத்துமாகும். இங்கு அமெரிக்காவில் ஒவ்வொரு நாளும் ஏதாவதொரு சம்பவம் நடைபெறுகிறது. ஆனால் அதற்கு முழு மார்க்கத்தையும் குறை கூறுவது தவறானதாகும்.

ஒரு விருந்தினர் கடந்த 40 ஆண்டுகளாக காவல் துறையில் பணியாற்றி வருகின்றார். அவர் கூறுகின்றார்: இந்த தூதுச் செய்தி முழு உலகிற்குமான தூதுச் செய்தியாகும். இதில் அமைதி, சமாதானம், அன்பு மற்றும் நேசம் மற்றும் உரிமைகள் தொடர்பாக தேவைகளுக்கேற்ப அறிவுரைகள் வழங்கப்பட்டன. இங்கு பல்வேறு நிற, இன மக்கள் 4,60,000 பேர் வாழ்கின்றனர். அண்டை அயலாரின் உரிமைகள் தொடர்பான விஷயங்கள் இன்றைய தூதுச் செய்தியில் மிக முக்கியம் வாய்ந்ததாகும்.

பிறகு ஒரு பெண்மணி டாக்டர் கிம்பர்லே (Kimberly) குற்றவியல் ஆய்வாளர் ஆவார். மேலும் அவர் எழுத்தாளரும் கூட. மேலும் Ph.D யும் செய்துள்ளார். அவர் கூறுகின்றார்: இன்றைய சொற்பொழிவில் அமைதி மற்றும் நீதி தொடர்பான ஆழமான தூதுச் செய்திகளைக் கேட்க முடிந்தது. மேலும் நிற, இன பாகுபாடின்றி ஒவ்வொருவரும் இந்த தூதுச் செய்திக்கு ஏற்ப ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும். இன்றைய சொற்பொழிவில் தாங்கள் இஸ்லாத்தின் உண்மையான வடிவத்தை முன் வைத்துள்ளீர்கள். அதன் சாராம்சம், அமைதி மற்றும் நீதி மற்றும் சமத்துவத்தின் சூழலை உருவாக்குவதாகும்.

அந்த பெண்மணி உணர்ச்சிவசப்பட்டு விட்டார்கள். மேலும் இன்றைய நாட்களில் எவர்கள் மார்க்கத்தின் பெயரால் நம்முடைய சமூகங்களிலும், நாட்டிலும் அநீதியை வெளிப்படுத்துகின்றார்களோ, குழப்பத்தைப் பரப்புகின்றார்களோ அவர்களுக்கும் மார்க்கத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இதை ஒவ்வொரு மனிதரும் அறிவது அவசியமாகும் என கண்ணீர் மல்கக் கூறினார்.

லோரேன் (Lorraine) சாஹிபா என்ற பெண்மணி தனது நற்தாக்கத்தை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்: நான் கடந்த 30 வருடங்களாக இந்த பகுதியில் இருக்கின்றேன். நான் இங்குள்ள நிலைமைகள் கண்ட மாற்றங்களை பார்த்து வருகின்றேன். சிறிது காலத்திற்கு முன்பு நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் மிகவும் வருத்தத்திற்குரியதாகும். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் அன்பு, நேசம், சமத்துவம் தொடர்பான தூதுச் செய்தி மிகவும் மகத்தானதாகும். இங்கு நான் அழைக்கப்பட்டதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

நான் இங்கு வந்து அஹ்மதிய்யா முஸ்லிம் தொடர்பாக நிறைய விஷயங்களை அறிய முடிந்தது. பள்ளிவாயில் இந்த பகுதியின் அழகைக் கூட்டியிருக்கின்றது. இதன் மூலம் எனக்கு எந்த ஆபத்தும் இல்லை. இது மிகவும் அமைதி நிறைந்த இடமாகும். நான் முஸ்லிம் இல்லை. நான் இந்த பள்ளிக்கு வந்திருக்கின்றேன். நான் இங்கு வரவேற்கப்பட்டேன். இதுதான் நமது சமூகத்திற்கு அவசியமாகும். இங்கு உங்களுடைய பல நிகழ்ச்சிகள் நடக்கும். அந்த நிகழ்ச்சிகளிலும் முஸ்லிம் அல்லாத பிற மார்க்கத்தைச் சார்ந்த மக்களையும் நீங்கள் அழைக்க வேண்டும் என நான் கூற விரும்புகின்றேன்.

இந்த பள்ளிவாயில்கள் திறப்பு விழாக்களைத் தவிர தங்களில் பெரும்பாலோர் அறிந்தது போன்று நான் குவேட்டேமாலாவில் Humanity First ன் ஒரு மருத்துவ மனையையும் திறந்து வைத்தேன். அங்கும் கூட சில அரசியல் சார்ந்த மக்களோடு தொடர்புகள் இருக்கின்றன. அங்குள்ள ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இங்கு UK வின் ஜலஸாவிற்கும் இரு முறை வந்துள்ளார். அவர்கள் அங்கு விமான நிலையத்தில் வரவேற்பதற்காக வந்தார். மேலும் நல்ல கருத்துக்களை வெளிப்படுத்தினார். மேலும் மருத்துவமனைக்கு நன்றி தெரிவித்தார். அதாவது ஜமாஅத் எங்களது நாட்டில் மருத்துவமனை திறக்கின்றது. மேலும் சமூகங்களுக்கு இடையே ஒரு அன்பையும், ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கிறது என்பதற்காக நன்றி தெரிவித்தார். அந்த பாராளுமன்ற உறுப்பினரின் பெயர் எழுதப்படவில்லை.

ராபர்ட் கேனோ (Robert Cano) சாஹிப் பராகுவேவில் Vice Minister of Education ஆவார். அவர் கூறினார்: இந்த திறப்பு விழா சந்தர்ப்பத்தில் கலந்து கொண்டு நான் மிகுந்த வியப்பிற்கு ஆளானேன். எப்படிப்பட்ட ஜமாஅத்தாக இது இருக்கின்றது என்றால் இதன் உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து இதை முழுமையடையச் செய்திருக்கிறார்கள். தேவையுடையவர்களுக்கு உதவி செய்வதற்காக இந்த அனைத்தையும் செய்திருக்கின்றார்கள். இது மனித குலத்தின் மீது அன்பு செலுத்துவதின் செயல் வெளிப்பாடாகும். மனித குலம் இந்த அன்பின் வழியை மேற்கொள்ளும் என்றால் உலகம் முழுவதிலும் அமைதி நிலவும். மேலும் இஸ்லாமிய மார்க்கத்தையும், அதன் கலாச்சாரத்தையும் அருகிலிருந்து பார்த்தது எனக்கு மிகச் சிறந்த அனுபவமாகும். அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பாக எனக்கு நிறைய கேள்விகள் இருந்தன. இங்கு வந்த பிறகு அதற்கான பதில்கள் கிடைத்து விட்டன.

சில ஆண்டுகளாக பராகுவேவிலும் ஜமாஅத் இருக்கின்றது. அவர்களின் அழைப்பின் பெயரில்தான் இவர் பராகுவேவிலிருந்து வந்திருந்தார்.

குவேட்டேமாலாவின் Vice Minister ஒருவர் வந்திருந்தார். குவேட்டேமாலாவின் மருத்துவர் டியானா கூறுகின்றார்: தங்களுடைய சொற்பொழிவில் ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்ற தூதுச் செய்தியை வழங்கினீர்கள். நானும் அதன்படி செயல்படுவேன். மேலும் அவர் கூறுகின்றார்: ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்று மார்க்கம் கற்றுக் கொடுக்கின்றது. இதையே கலீஃபா அவர்கள் தமது சொற்பொழிவிலும் கூறினார்கள் என்று கூறி இறைவனுக்கு நன்றி தெரிவித்தார்.

பிறகு குவேட்டேமாலாவின் ஒரு பத்திரிகையாளர் கூறுகின்றார்: மார்க்கத்தில் நிர்பந்தம் இல்லை என்ற கருத்து என்னை மிகுந்த தாக்கத்திற்கு ஆளாக்கியது. மாறாக, ஒருவர் மற்றவரைக் கருத்தில் கொள்ள வேண்டும். நாமும் பிறரைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்ற தூதுச் செய்தி தாக்கத்தை ஏற்படுத்தியது. நாம் அனைவரும் சம உரிமை உடையவர்களாக இருக்கின்றோம். ஒவ்வொருவருக்கும் சிறந்த வாழ்க்கை கிடைக்க வேண்டும் என்றும் இமாம் ஜமாஅத் அவர்கள் தூதுச் செய்தியில் நமக்கு கூறினார்கள்.

ஒரு பத்திரிகையின் ஆசிரியர் பர்தாந்தூ பர்னீதா என்ற பெண்மணி கூறுகின்றார்: தாங்கள் ஆற்றிய சொற்பொழிவினால் நான் மிகுந்த தாக்கத்திற்கு உள்ளானேன். தாங்களோடு நடந்த சந்திப்பும் சிறந்ததாக இருந்தது. நாஸிர் மருத்துவனையின் Project மிகச் சிறந்ததாக இருந்தது. நமக்கு இந்த நாட்டில் இன்னும் பல Project கள் தேவைப்படுகின்றன என்பதை கூற விரும்புகின்றேன்.

பிறகு ஒரு வங்கி அதிகாரி கூறுகின்றார்: மனித குலத்தோடு அனுதாபம் காட்ட வேண்டும் என்பதே தாங்களின் சொற்பொழிவின் சாராம்சாகும். தாங்கள் திறந்திருக்கின்ற நாஸிர் மருத்துவமனை அதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

பிறகு இன்னொரு வங்கி மேலாளர் கூறுகின்றார்: மிகவும் அழகிய மற்றும் எளிதில் புரிய முடிகின்ற தூதுச் செய்தியாக இருந்தது. மனித குலத்திற்கு உதவி செய்வது நம் அனைவரது கடமையாகும் என்பது முஸ்லிம் தரப்பிலிருந்து வழங்கப்பட்டுள்ள தூதுச் செய்தியாகும். உள்ளம் கவர்ந்த இன்னொரு விஷயம் என்னவென்றால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தத்துவங்களினால் இன்று நான் மிகுந்த நற்தாக்கத்திற்கு உள்ளாளேன். இனி இது தொடர்பாக இன்னும் நிறைய விஷயங்களை அறிந்து கொள்வேன்.

குவேட்டேமாலாவில் Review of Religions பத்திரிகை Spanish மொழியில் துவக்கப்பட்டது. லத்தீன் அமெரிக்கா மற்றும் மத்திய அமெரிக்கா போன்ற இடங்களில் ஏறக்குறைய 400 மில்லியன் மக்கள் Spanish மொழி பேசுகின்றார்கள். Spain நாட்டின் பக்கம் நமக்கு கவனம் ஏற்பட்டபோது இங்குள்ள ஒரு கலப்பற்ற அஹ்மதி குவேட்டேமாலாவின் டியோடு சாஹிப் கூறினார்: உங்களுக்கு Spain னின் பக்கம் கவனம் உள்ளது. அங்கு இஸ்லாத்தை பரப்ப வேண்டும் என்று எண்ணுகிறீர்கள். இவர் குவேட்டேமாலாவின் ஆரம்பகால அஹ்மதிகளில் ஒருவர் ஆவார்.

அவர் கூறுகிறார்: Spain னின் மக்கள் தொகை 40 மில்லியன் ஆகும். ஆனால் எங்களது நாடுகளில் Spanish மொழி பேசக்கூடியவர்களின் எண்ணிக்கை 400 மில்லியன் ஆகும். இதன் பக்கம் தாங்கள் கவனம் செலுத்தவில்லை என்று கூறினார்.

அதற்குப் பிறகு அங்கு முறையாக மிஷன்கள் நிறுவுவதன் பக்கமும் கவனம் ஏற்பட்டது. ஜாமிஆவின் மாணவர்களும் அனுப்பப்பட்டார்கள். அல்லாஹ்வின் அருளால் அங்கு ஜமாஅத் உருவாகி வருகின்றன. எவ்வாறிருப்பினும் அங்கு Spanish மொழியில் Review of Religions பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது அந்நியர்களின் நற்தாக்கங்களின் வெளிப்பாடாகும். குவேட்டேமாலாவில் பல்வேறு அண்டை நாடுகளின் Spanish மொழி பேசப்படக்கூடிய நாடுகளிலுள்ள அஹ்மதிகளும் வந்திருந்தார்கள். மருத்துவமனை திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக என்று கூறினாலும் சரி அல்லது என்னைச் சந்திப்பதற்காக என்று எடுத்துக் கொண்டாலும் சரி. அவர்களின் உணர்வுகளின் வெளிப்பாடுகளும் பல உள்ளன. அவர்களில் சிலர் முதல் முறையாக காலத்தின் கலீஃபாவைச் சந்திக்கின்றனர். அவர்களின் கண்களிலிருந்தும் உள்ளத்திலிருந்தும் கிலாஃபத் மீதான அன்பு பீறிட்டு எழுந்து கொண்டிருந்தது.

மெக்ஸிகோவிலிருந்து வந்திருந்த ஒரு புதிய அஹ்மதி பெண்மணி லாயிரா மால்தே சாஹிபா கூறுகின்றார்: இவர் சில காலத்திற்கு முன்பு பைஅத் செய்துள்ளார். அவர் கூறுகிறார்: இந்த குவேட்டேமாலா பயணத்திற்குப் பிறகு எங்கு இறைவன் விரும்புகின்றானோ நான் அங்குதான் இருக்கின்றேன் என்ற விஷயம் என்னுடைய உள்ளத்தில் உறுதியாகப் பதிந்து விட்டது. நான் ஆன்மீக ரீதியிலும் உணர்வு ரீதியிலும் மிகுந்த திருப்தியையும் அமைதியையும் உணர்கின்றேன் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. பிற நாடுகளின் அஹ்மதி சகோதர சகோதரிகளைச் சந்தித்ததும் ஈமானுக்கு புத்துணர்வு ஊட்டியது. எல்லாவற்றிற்கும் மேலாக காலத்தின் கலீஃபாவிற்குப் பின்னால் தொழுது என்னுடைய ஈமான் அல்லாஹ்வின் மீதும் உண்மை இஸ்லாம் ஆன அஹ்மதிய்யதின் மீதும் மேலும் உறுதியாகி விட்டது. நான் இப்பாதையில் எப்போதும் நிலைத்திருக்க வேண்டும் என்பதே எனது ஆசையாகும்.

அல்லாஹ் அவ்வாறே ஆக்குவானாக.

பிறகு மெக்ஸிகோவின் ஒரு புதிய அஹ்மதி ஈவான் ஃபிரான்ஸிஸ்கோ (Ivan Francisco) சாஹிப் கூறுகின்றார்: நாங்கள் காலத்தின் கலீஃபாவின் கையில் பைஅத் செய்தோம். அங்கு பள்ளிவாயிலில் பைஅத் நிகழ்ச்சியும் இருந்தது. அது எப்படிப்பட்ட நொடிப்பொழுதுகள் என்றால் வார்த்தைகளில் விவரிக்க இயலாது. அந்த நொடிப்பொழுதில் உடல் அளவில் நான் உணர்ந்தது என்னவென்றால், என்னுடைய முழு உடலும் சூடாகி விட்டது. வியர்வை வரத் தொடங்கியது. எனது உடலில் ஒரு மின்சாரம் பாய்ந்தது போன்று இருந்தது. அது தன்னோடு எனது அனைத்து பாவங்களையும் எடுத்துச் சென்று விட்டது. இறைவனுக்கு இலட்சக்கணக்கான நன்றிகள். அவன் நமக்கு கிலாஃபத்தை வழங்கியுள்ளான். நான் நன்மையில் முன்னேறுவதற்கான முதல் அடி இதுவென்றும் என்னிடத்தில் ஒரு மாற்றம் ஏற்படும் என்பதையும் நான் அறிகின்றேன்.

பிறகு மெக்ஸிகோவிலிருந்து வந்த ஒரு புதிய அஹ்மதி மேகல் ஏஞ்சல் (Miguel Angel) சாஹிப் கூறுகின்றார்: உண்மை என்னவென்றால், இஸ்லாம் அஹ்மதிய்யத்தில் எந்த எல்லையும் இல்லை. மேலும் நம்மை பிளவுபடுத்துவதற்கான எந்த கோடும் இல்லை. நாம் அனைவரும் சகோதரர்கள் ஆவோம். வித்தியாசம் இருக்கிறது என்றால் மொழியில் மட்டுமே இருக்கிறது. அதுவன்றி நாம் அனைவரும் சகோதரர்களே ஆவோம். காலத்தின் கலீஃபாவிற்குப் பின்னால் தொழும்போது கூட நாம் 10,15 பல்வேறு நாடுகளிலிருந்து வந்தவர்கள் நிற்கின்றோம். ஆனால் நாம் ஒன்றாக நின்றோம். ஒரு கலீஃபாவின் பின்னால் தொழுது கொண்டிருந்தோம்.

பிறகு விஸெண்டே பிரியோனஸ் (Vicente Briones) சாஹிபா கூறுகின்றார்: நான் மெக்ஸிகோ சிட்டி ஜமாஅத்தோடு தொடர்புடையவள். குவேட்டேமாலா செல்வதற்கான சந்தர்ப்பம் வந்துள்ளது என்று கூறப்பட்டபோது நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். அங்கு காலத்தின் கலீஃபாவைச் சந்திக்கலாம் என்று கூறப்பட்டபோது மகிழ்ச்சி இன்னும் அதிகமானது. நான் அவர்களைச் சந்தித்த போது மிக மகிழ்ச்சியடைந்தேன். ஏனென்றால் போதுமான நேரம் அவர்களுக்கு அருகில் அமரும் சந்தர்ப்பம் கிடைத்தது. சில காலத்திற்கு முன்பு நான் மெக்ஸிகோ சிட்டியில் பைஅத் செய்திருந்தேன். ஆனால் கலீஃபாவின் கையில் பைஅத் செய்வது எனது வாழ்க்கையில் நடந்த எப்படிப்பட்ட சம்பவம் என்றால் அதை வார்த்தைகளில் கூற முடியாது.

அவர் கூறுகிறார்: நான் எனது கண்ணீரைத் துடைத்தவாறு இது எனது வாழ்வின் மிக அழகிய நாளாக இருந்தது என்று கூறினேன்.

ஹோன்டூரஸ் (Honduras) நாட்டிலிருந்து வந்திருந்த ஒரு புதிய அஹ்மதி பெண் ரோஸா டெல்மி (Rosa Delmi) சாஹிபா என்ற பெண்மணி கூறுகின்றார்: முதல் முறை எனது நாட்டை விட்டு வெளியே செல்வதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. இவ்வளவு நீண்ட பயணத்தை மேற்கொள்ள வேண்டியதிருந்தது. ஹோண்டூரஸலிருந்து குவேட்டேமாலாவிற்குச் செல்ல 16 மணி நேரம் ஆகியது. பயணத்தின்

பல்வேறு துன்பங்களையும் எதிர்கொள்ள வேண்டியது வந்தது. ஆனால் ஜமாஅத்தின் பள்ளிவாயிலையும், காலத்தின் கலீஃபாவையும் கண்டதுமே அனைத்து கஷ்டங்களும் அதன் உணர்வுகளும் சிந்தனையை விட்டு அகன்று விட்டன. ஜமாஅத்தின் மிகவும் நேசத்திற்குரிய நல்ல மனிதர்களை சந்திக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் என்னை தமது குடும்ப உறுப்பினராகவே நடத்தினார்கள். அமெரிக்காவிலிருந்து வந்திருந்த ஓர் அஹ்மதி பெண்மணி என்னிடத்தில் நான் அவர்களின் மகளைப் போன்று என்று குறிப்பிட்டார்கள். இந்த பயணத்தின் மிகச் சிறந்த பகுதி காலத்தின் கலீஃபாவைச் சந்தித்ததாகும். நான் தனிப்பட்ட எந்தவொரு விஷயத்தையும் கூறவில்லை. ஏனெனில் நான் ஒரு தனி உலகில் இருப்பதைப் போன்று உணர்ந்தேன். அமர்ந்து பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். அவர்களது பேச்சை கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்றே விரும்பினேன். இது எப்படிப்பட்ட அனுபவம் என்றால் அதை வார்த்தைகளில் கூறி விட முடியாது. இந்த பயணத்தின்போது ஜமாஅத்தின் போதனைகள் குறித்த எனது அறிவு அதிகமானது. மேலும் அங்கு எனக்கு நஸ்ம் படிப்பதற்கான சந்தர்ப்பமும் கிடைத்தது.

பிறகு எட்வின் அர்மாந்தோ (Edmin Armando) சாஹிப் ஆவார். அவர் ஹோன்டூரஸ் நாட்டைச் சார்ந்தவர் ஆவார். அவர் கூறுகின்றார்: காலத்தின் கலீஃபாவைச் சந்தித்தது இந்த பயணத்தின் மிகச்சிறந்த விஷயமாகும். மேலும் எனது பல்வேறு கேள்விகளுக்கான பதிலும் கிடைத்து விட்டன என்றார்.

பிறகு ஈக்வேடாரிலிருந்து ஒரு புதிய அஹ்மதி வந்திருந்தார். அவர் கூறுகிறார்: காலத்தின் கலீஃபாவின் வருகை எனக்கு கிடைத்த அரிய கரூவூலமாகும். ஆன்மீகம், அமைதி, மகிழ்ச்சியின் உணர்வுகள் என்னிடம் நிரம்பின. எனக்கு மிகுந்த நிம்மதி கிடைத்தது. பைஅத்தின்போது அன்னாரின் அருளுக்குரிய கைகளில் எனது கையை வைக்கக்கூடிய நற்பேறு எப்படிப்பட்டதென்றால் இதற்கு முன் இத்தகைய நற்பேறு கிடைத்ததில்லை.

ஈக்வேடாரிலிருந்து ஒரு வருடத்திற்கு முன்பு பைஅத் செய்த லஜ்னா உறுப்பினர் ஒருவர் கூறுகின்றார்: குவேட்டேமாலவின் பயணம் எனக்கும் எனது மகனுக்கும் மிகவும் பசுமையானதாக இருந்தது. நாங்கள் முதல் முறை காலத்தின் கலீஃபாவைப் பார்த்தது ஒரு குறிப்பான தருணமாகும். ஏனென்றால் அதன் மூலம் அமைதி, அன்பு மற்றும் பொறுமையின் உணர்வுகள் பிறந்தன. சந்திப்பின்போது எனது மகன் காலத்தின் கலீஃபாவை கட்டித் தழுவினான். அது மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அதை நாங்கள் எங்களின் நற்பேறாகவும் அருளாகவும் கருதுகின்றோம். ஈக்வேடாருக்கு திரும்பக்கூடிய பயணம் எங்களுக்கு மிகவும் துக்கத்தை தரும். ஏனென்றால் அஹ்மதி சகோதரர்கள் மற்றும் காலத்தின் கலீஃபாவின் நினைவுகள் எங்களுக்கு அதிகம் வரும். நாம் மீண்டும் சந்திப்போம் என நம்புகின்றேன்.

பிறகு குவேட்டேமாலாவின் ஒரு புதிய அஹ்மதி சுலைமான் ரோட்ரிக்ஸ் (Soliman Rodrigez) சாஹிப் கூறுகின்றார்: கலீஃபத்துல் மஸீஹ் குவேட்டேமாலா வருகை தந்தது எங்களின் நற்பாக்கியத்திற்கு காரணியாகும். அன்னார் இங்கு வந்தது அல்லாஹ் எங்களது ஜமாஅத் மீது செய்த அருளாகும். அன்னார் குவேட்டேமாலா வருகிறார்கள் என்பதை அறியும்போது எங்களது மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. என்னிடத்தில் ஓர் ஆன்மீக உறுதி உருவாக ஆரம்பித்து விட்டது. இப்போது நான் என்னிடத்தில் பெரிய மாற்றத்தை உணர்கின்றேன் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

பிறகு குவேட்டேமாலாவின் ஒரு புதிய அஹ்மதி லீஸா பின்த்து (Lisa Pinto) சாஹிபா கூறுகின்றார்: கலீஃபத்துல் மஸீஹ் குவேட்டேமாலா வருகை தந்ததற்கு நான் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துகின்றேன். இது எனக்கு மிகவும் பெருமிதத்திற்குரியதும் மரியாதைக்குரிய விஷயமும் ஆகும். மேலும் இது எனக்கு ஒரு மாபெரும் அனுபவம் ஆகும். எனது உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பி விட்டது.

பிறகு குவேட்டேமாலாவைச் சார்ந்த ஒருவர் டோமின்ங்கோ தியூல் (Domingo Tiul) கூறுகின்றார்: நான் கேபூன் ஜமாஅத்தைச் சார்ந்தவன். இங்கு காலத்தின் கலீஃபாவின் வருகை நான் எனது ஈமனிலும் ஆன்மீக அடிப்படையிலும் மிகுந்த உத்வேகத்தைப் பெற்றிருக்கின்றேன். நான் மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கின்றேன். காலத்தின் கலீஃபாவோடு நேரத்தை கழிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அநேகமாக இவர்தான் அதிக உணர்ச்சிவசப்பட்டிருந்தார் என்று கருதுகின்றேன். பைஅத் செய்து சில காலம்தான் ஆகின்றது. மிகவும் உணர்ச்சிவசப்பட்டு என்னிடத்தில் கூறினார். எங்களது பகுதிகளில் ஏழை மக்கள் இருக்கின்றனர். அது மிகவும் தொலை தூர பகுதியாகும். அந்த எல்லைகளில் முற்றிலும் சாலைகள் கூட இல்லை. என்னுடைய சமுதாயத்தின் அந்த பகுதியின் மக்களும் அஹ்மதி முஸ்லிமாக வேண்டும் என்பதற்காக துஆ செய்யுங்கள். எனக்கு கிடைத்திருக்கின்ற அல்லாஹ்வின் அருள் எனது சமுதாயத்திற்கும் கிடைக்க வேண்டும். அவர் மிகுந்த உணர்ச்சிவசப்பட்டவாறு இந்த துஆவிற்கு விண்ணப்பித்தார். அல்லாஹ் அங்கேயும் ஜமாஅத்தை பரவச் செய்வானாக.

பிறகு குவேட்டேமாலாவிலிருந்து வந்திருந்த தேஸா மர்தேஸா சாஹிபா கூறுகின்றார்: நான் முதலில் புகைப்படங்களில்தான் பார்த்திருந்தேன். காலத்தின் கலீஃபாவை இப்போது அருகிலிருந்து பார்க்கும் சந்தப்பம் கிடைத்தது. அமர்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. என்னிடத்தில் மிகப்பெரிய மாற்றத்தை நான் உணர்கின்றேன் என்றார்.

பிறகு கிளாடியா சாஹிபா கூறுகின்றார்: நான் மகிழ்ச்சியாக இருக்கின்றேன். நான் என்னை நற்பேறு பெற்றவளாக கருதுகின்றேன். அல்லாஹ் என்மீது அருள் புரிந்துள்ளான். எனது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு என்னிடத்தில் வார்த்தைகள் இல்லை. என்னுடைய ஈமானும் பற்று விசுவாசமும் அதிகமாவதற்காக துஆவிற்கான விண்ணப்பிக்கிறேன் என்றார்.

பிறகு மெக்ஸிகோவில் சியாப்பஸ் (Chiapas) ஜமாஅத்திலிருந்து கதீஜா சாஹிபா கூறுகின்றார்: கலீஃபத்துல் மஸீஹை சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைத்ததற்கு அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துகின்றேன். எங்களது கேள்விகளுக்கான பதில்கள் கிடைத்தன. இஸ்லாத்தின் மீது எனக்கு அன்பு அதிகமானது. பைஅத் செய்ததன் மூலமாக எனது ஈமான் மீண்டும் உயிர் பெற்றது. எனது மற்றும் எனது சியாப்பஸ் முழு ஜமாஅத்தும் ஈமானிலும் இறைஞானத்திலும் முன்னேறுவதற்காக துஆவிற்காக விண்ணப்பிக்கின்றேன் என்றார்.

யாஸ்மீன் கோமஸ் (Yasmin Gomez) சாஹிபா கூறுகின்றார்: மிகவும் அழகிய நினைவுகள். மிகவும் அழகிய அனுபவம். எனது உணர்வுகள் எவ்வாறு இருந்தன என்றால் மகிழ்ச்சியால் எனக்கு ஆனந்த கண்ணீர் வந்து கொண்டிருந்தது. அதை நான் வார்த்தைகளில் சொல்ல முடியாது. இந்த சந்திப்பிற்குப் பிறகு எனது வாழ்க்கையை சிறந்ததாக்குவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும்.

பிறகு சுரய்யா கோமஸ் (Surayya Gomez) சாஹிபா கூறுகின்றார்: எனது உணர்வுகள் எனது உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளி வருகின்றன. ஒரு மிகப்பெரிய அனுபவம் கிடைத்துள்ளது. அல்லாஹ் எனது ஈமானையும் கலப்பற்ற தன்மையையும் அதிகப்படுத்துவானாக.

மெக்ஸிகோவின் ஒரு புதிய அஹ்மதி புயூஸ் ஹுஸூஸ் சாஹிப் கூறுகின்றார்: ஜமாஅத்தோடு தொடர்பை ஏற்படுத்துவது மாபெரும் அருளாகும். அல்லாஹ் எனது துஆக்களை ஏற்றுக் கொண்டதனால் நான் மிகப் பெரும் நற்பேறு பெற்றவன் ஆவேன். நான் இருளில் இருந்தேன். அல்லாஹ் என்னையும் எனது குடும்பத்தையும் ஒளியின் பக்கம் அழைத்து வந்தான். மேலும் எனது வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. பிறகு இறைவணக்கங்கள் தொடர்பாக நான் கேள்விகளையும் கேட்டேன். அவைகளுக்கு திருப்திகரமான பதில்களும் கிடைத்தன.

லேலி லத்தீஃப் சாஹிபா கூறுகின்றார்: ஆரம்பத்தில் TV மூலமாகவே அறிமுகம் இருந்தது. இப்போது சந்தித்த பிறகு எனது உணர்வுகள் வேறு விதமாக இருக்கின்றன.

பனாமாவிலிருந்து வந்திருந்த ஹேலி தோரு (Holiodoro) சாஹிப் இவர் மனைவி மற்றும் மகளோடு வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: சந்திப்பு மகிழ்ச்சியால் நிறைந்த நாளாக இருந்தது. அதை வார்த்தைகளில்

கூற முடியாது. அவர்கள் மிகுந்த அன்பு மற்றும் பற்றுணர்வை வெளிப்படுத்தினார்.

பெலீஸிலிருந்து (Belize) ஒரு குழு வந்திருந்தது. கோல்டா மாட்டீனா (Golda Martina) சாஹிபா கூறுகின்றார்: மிகவும் உள்ளம் கவரக்கூடிய மற்றும் அருளுக்குரிய சந்தர்ப்பமாக இது இருந்தது. நான் உணர்ச்சிவசப்பட்டேன். இந்த பயணம் எனது நினைவில் எப்போதும் இருக்கும்.

பிறகு இன்னொரு உறுப்பினர் நிக்கோல் அவிலெஸ் (Nicole Avilez) கூறுகின்றார்: மிகவும் உணர்ச்சிப் பூர்வமான சந்திப்பாக இருந்தது. காலத்தின் கலீஃபா என்னை UK ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அழைத்தது மிகுந்த மகிழ்ச்சி அளித்தது.

லஜ்னாவின் ஒரு உறுப்பினர் பிளோரெண்டினா (Florentina) சாஹிபா கூறுகின்றார்: மிகவும் மகிழ்ச்சிக்குரிய சந்தர்ப்பமாக இருந்தது. என்னை சந்தித்ததில் அவர்களுக்கு மன நிம்மதி கிடைத்தது.

ஒரு சிறுமி கூறுகின்றாள்: 13,14 வயதுதான் இருக்கும். காலத்தின் கலீஃபாவிற்கு முன்பு நான் வெட்கப்படுகின்ற அளவுக்கு ஏதேனும் ஒரு விஷயத்தைக் கூறிவிடக் கூடாதே என்ற அச்சம் என்னிடத்தில் இருந்தது. ஆனால் சந்திப்பு மிகச் சிறந்ததாக இருந்தது. கிலாஃபத் பற்றிய கண்ணியம் அவர்களிடத்தில் அளவு கடந்து இருந்தது. அந்த சிறுமிகள் ஹே தஸ்தே கிப்லனுமா என்ற நஸத்தையும் படித்தார்கள்.

இதே போன்று இன்னும் நிறைய பெண்மணிகளும் சகோதரிகளும் பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்தார்கள். குவேட்டேமாலா மற்றும் நீண்ட பயணங்களை மேற்கொண்டு வந்திருந்தார்கள். அவர்கள் அனைவரிடமிருந்தும் மிகுந்த பற்றுணர்வும் விசுவாசமும் வெளிப்பட்டது. அல்லாஹ் அவர்களின் கலப்பற்ற தன்மையையும் விசுவாசத்தையும் அதிகரிக்கச் செய்வானாக. அவர்களை உண்மையான அஹ்மதிகளாக ஆக்குவானாக.

அல்லாஹ்வின் அருளால் USA வின் Media Team தரப்பிலிருந்து நல்ல கவரேஜ் கிடைத்தது. USA வின் Team சிறந்த முறையில் பணியாற்றியுள்ளது. அவர்களுக்கு ஊடகங்களுடன் நல்ல தொடர்பு இருக்கின்றது. இப்போது அதில் சிறிதளவு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இருந்த போதிலும் இதற்கு முந்தைய Team ம் கூட சிறந்த பணி செய்தது. அமெரிக்காவின் TV மூலமாக மொத்தம் 28 லட்சத்து 69 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியது. Radio நிகழ்ச்சிகள் மூலமாக மொத்தம் 53 லட்சத்து 98 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியது.

Digital Forum WebsiteS மற்றும் Social Media போன்றவைகள் மூலமாக மொத்தம் 20 லட்சம் மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியது. பத்திரிகைகளில் எனது சுற்றுப்பயணம் தொடர்பாக 45 Articles மற்றும் செய்திகள் வெளிவந்துள்ளன. அதில் புகழ்பெற்ற பத்திரிகைகளான The Baltimore Sun, The Philadelphiya InQuirer, Religion News Service, Houston Chronical அடங்கும். இவைகள் மூலமாக அவர்களின் கணிப்பின்படி 10 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியது.

குவேட்டேமாலாவிலும் கூட நல்ல Media Covrage கிடைத்தது. Prensa Libre என்ற தேசிய பத்திரிகை இதன் தினசரி 1 லட்சத்து 30 ஆயிரம் பிரதிகள் வெளிவருகின்றன. மேலும் 4 மில்லியன் மக்களை விட அதிகமானவர்கள் இதனை படிக்கின்றனர். 24 அக்டோபர் அன்று முதல் பக்கத்தில் நாஸிர் மருத்துவமனையின் பெரிய புகைப்படத்தோடு அதன் திறப்பு விழா பற்றிய செய்தியை வெளியிட்டது.

ஒரு தேசிய பத்திரிகையில் கட்டுரை எழுதுபவர் நாஸிர் மருத்துவமனை தொடர்பாக ஒரு கட்டுரை எழுதியிருந்தார். National TV குவேட்டேமாலாவின் என்னைப் பற்றியும் மருத்துவமனையின் அறிமுகம் தொடர்பாகவும் செய்தியும் அறிக்கையும் வெளியிட்டிருந்தது. National Radio Channel களிலும் அறிக்கைகள் வந்து கொண்டிருந்தன. இதற்கேற்ப ஒரு கணிப்பின்படி லத்தீன் அமெரிக்காவின் பல்வேறு நாடுகளின் Print Media மற்றும் பல்வேறு செய்தித்தாள்கள் மற்றும் Television Channel மூலமாக ஏறக்குறைய 20 லட்சம் மக்கள் வரை செய்தி சென்று சேர்ந்தது.

அல்லாஹ்வின் அருளால் எல்லா வகையிலும் இந்த சுற்றுப் பயணம் மிகவும் அருளுக்குரியதாகவும் வெற்றிக்குரியதாகவும் இருந்தது. அல்லாஹ் இதன் நல்ல விளைவுகளை எதிர்காலத்திலும் உருவாக்குவானாக.

தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். அது மதிப்பிற்குரிய ஸாவாது கோ இஸ்மாயீல் சாஹிபுடையதாகும். இவர் புர்கினாஃபாஸோவைச் சார்ந்தவர் ஆவார். 14 நவம்பர் அன்று ஃபஜர் தொழுகைக்காக வீட்டிலிருந்து கிளம்பிய போது நடு வழியில் இதயக் கோளாறு ஏற்பட்டதன் காரணமாக விழுந்து விட்டார்கள். அருகில் இருக்கக்கூடிய மக்கள் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். ஆனால் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

1964– ஆம் ஆண்டு இவர் பிறந்தார். 1994–ஆம் ஆண்டு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். மிஷன் ஹவுஸிற்கு அருகிலேயே இருப்பதற்கு எப்போதும் முயற்சி செய்து வருவார். மிஷன் ஹவுஸ் புதிய இடத்திற்கு மாற்றப்பட்டபோது அதற்கு அருகிலேயே வாடகை வீட்டிற்கு சென்றார். பாங்கு கொடுப்பதற்காக பள்ளிவாயிலுக்கு செல்ல வேண்டும் என எப்போதும் முயற்சி செய்தார். ஆண்டு மாநாட்டின் போது மக்களை தஹஜ்ஜுத் தொழுகைக்காக எழுப்புவதில் ஆர்வமாக இருப்பார்கள். அழகிய குரலில் பாங்கு கொடுப்பார்கள். இதன் காரணமாக இவரை சய்யிதுனா பிலால் என்று அழைக்கத் தொடங்கினார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் ரமலான் மாதத்தில் இஃதிகாஃப் அமர்வார்கள். தொழுகைகளை மிகவும் பேணக் கூடியவர். மற்றும் பிறருக்கு கவனமூட்டக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். ஃபஜ்ர் தொழுகைக்கு முன்பாகவே வந்து அங்குள்ள விடுதியில் தங்கும் மாணவர்களை எழுப்புவார்கள். பாங்கு கொடுப்பார்கள். பள்ளிவாயில் சுத்தத்தை எப்போதும் கருத்தில் கொள்வார்கள். லாஹூரிலுள்ள நமது பள்ளிவாயில்களில் நடைபெற்ற தாக்குதலின்போது ஏற்பட்ட ஷஹாதத்துகள் பற்றி கேள்விப்பட்டு, மிகவும் அழுதார்கள். நானும் அந்த ஷஹீதுகளில் ஒருவனாக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்ற ஆசையை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தினார்கள். ஜமாஅத் பணிகளில் எப்போதும் அனைவரையும் விட முன்னனியில் நிற்பார்கள்.

2004–ஆம் ஆண்டு நான் அங்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது பாதுகாப்புப் பணியில் எப்போதும் முன் நிற்பார்கள். ஒரு முறை அங்கு ஒரு நிகழ்ச்சியில் நான் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தபோது இவரும் Duty கொடுத்துக் கொண்டிருந்தார். திடீரென மயங்கி கீழே விழுந்து விட்டார். அநேகமாக எதுவும் உண்ணவும் குடிக்கவும் இல்லை. அல்லது நேராக நின்றதன் காரணத்தினால் கூட இருக்கலாம். எவ்வாறிருப்பினும் அதை சான்று காட்டி நான்தான் அந்த நபர் என்று அந்த கடிதத்தில் எப்போதும் குறிப்பிட்டு வந்தார்கள். மிகவும் கலப்பற்ற மனப்பான்மை உடைய கிலாஃபத் மற்றும் அஹ்மதிய்யத்தின் உண்மை நேசராக இருந்தார்.

தொழில் ரீதியில் வனத்துறையில் Security Gard ஆக இருந்தார். அவர்கள் நல்லடக்கம் செய்யப்படும் நேரத்தில் Central Mayor தரப்பிலிருந்து வனத்துறையின் Commanding Officer அழகிய முறையில் அன்னாரின் சேவைகளை அனைவர் முன்பும் எடுத்துரைத்தார். இஸ்மாயீல் விசுவாசமுடையவராகவும், கலப்பற்றவராகவும், ஈமானுடையவராகவும், மலர்ந்த முகத்தை உடையவராகவும் இருந்ததாக குறிப்பிட்டார். தமது கடமைகளை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றி வந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவராகவும் இருந்தார்கள்.

தமக்கு பின்னால் முதல் மனைவியின் மூலமாக ஒரு மகன் மற்றும் ஒரு மகளும், இரண்டாவது மனைவியின் மூலம் இரண்டு மாத மகளையும் நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள்.

அல்லாஹ் மர்ஹூமின் அந்தஸ்தை உயர்த்துவானாக. மன்னித்தலுடன் நடந்து கொள்வானாக. மேலும் அவர்களின் குழந்தைகளையும் அவனது பாதுகாப்பிலும் அமைதியிலும் வைப்பானாக.

# ஜுமுஆ பேருரை

**ஒரு நபிமொழியில் வருகிறது: அல்லாஹ் பத்ர் போரில் கலந்து கொண்டவர்களிடம், நீங்கள் எதை விரும்பினாலும் செய்யுங்கள். நான் உங்களை மன்னித்து விட்டேன் என்று கூறினான்**

**கட்டுப்படுதலிலும், கலப்பற்ற தன்மை மற்றும் விசுவாசத்தில் தம்மைத் தாமே அர்ப்பணித்துக் கொண்ட, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது பத்ர் போர் சஹாபாக்களான ஹஸ்ரத் ஸினான் பின் அபீ ஸினான், ஹஸ்ரத் மஹ்ஜஃ, ஹஸ்ரத் ஆமிர் பின் முஹ்லத், ஹஸ்ரத் ஹாத்திப் பின் அம்ர் பின் அப்தே கைஸ் அப்தே ஷம்ஸ், ஹஸ்ரத் அபூ ஹஸீமா பின் அவ்ஸ், ஹஸ்ரத் தமீம் மவ்லா ஹராஷ், ஹஸ்ரத் முன்ஸிர் பின் குதாமா, ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஹாத்திப், ஹஸ்ரத் சஃலபா பின் ஸைது, ஹஸ்ரத் உக்பா பின் வஹப், ஹஸ்ரத் ஹபீப் பின் அஸ்வத், ஹஸ்ரத் உஸைமா அன்ஸாரி, ஹஸ்ரத் ராஃபி பின் ஹாரிஸ், ஹஸ்ரத் ருஹைலா பின் சஃலபா அன்ஸாரி, ஹஸ்ரத் ஜாபின் பின் அப்துல்லாஹ் பின் ரிஆப், ஹஸ்ரத் சாபித் பின் இக்ரம் பின் சஃலபா, ஹஸ்ரத் சல்மா பின் சலாமா, ஹஸ்ரத் ஜபர் பின் அதீக், ஹஸ்ரத் சாபித் பின் சஃலபா, ஹஸ்ரத் சுஹைல் பின் வஹப், ஹஸ்ரத் துஃபைல் பின் ஹாரிஸ், ஹஸ்ரத் அபூ சுலைத் அஸீரா பின் அம்ர், ஹஸ்ரத் சஃலபா பின் ஹாத்திப் அன்ஸாரி, ஹஸ்ரத் ஆமிர் பின் உமைய்யா, ஹஸ்ரத் அம்ர் பின் அபீ சரஹ், ஹஸ்ரத் அஸ்மா பின் ஹுஸைன், ஹஸ்ரத் கலீஃபா பின் அதீ, ஹஸ்ரத் மஆத் பின் மாயிஸ், ஹஸ்ரத் சஅது பின் ஸைது அல்அஷ்ஹலி ஆகியோரைப் பற்றிய நற்குறிப்புகள்**

**அல்லாஹ் இந்த சஹாபாக்களின் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக. மேலும் நமக்கும் நன்மைகள் செய்யவும், தியாகங்கள் செய்யவும், விசுவாசத்திலும், கலப்பற்ற தன்மையிலும் நமது வாழ்க்கையைக் கழிப்பதற்கான நற்பாக்கியத்தை வழங்கிக் கொண்டே செல்வானாக**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 23 நவம்பர் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **23 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று முதல் நான் மீண்டும் பத்ர் போர் சஹாபாக்களின் நற்குறிப்பை எடுத்துரைப்பேன். முதலாவதாக, ஸினான் பின் அபீ ஸினான் என்பவரின் நற்குறிப்பை பார்ப்போம்.

அன்னார் பனூ அஸது என்ற கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். பத்ர் போரில் அன்னார் பங்கு பெற்றிருந்தார்கள். உஹது போர், அகழ் போர் மற்றும் ஹுதைபிய்யா உடன்படிக்கை உட்பட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எத்தனை போருக்கான சந்தர்ப்பங்கள் வந்தனவோ அவை அனைத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். பைத்தே ரிஸ்வானில் முதல் முதலில் யார் பைஅத் செய்தார் என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. சிலரைப் பொருத்தவரை அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் முதலில் பைஅத் செய்தார்கள். வேறு சிலரைப் பொருத்தவரை ஹஸ்ரத் ஸலமா பின் அல் அக்வா ஆவார்கள்.

ஆனால் பக்தவியைப் பொருத்தவரை ஹஸ்ரத் ஸினான் பின் அபீ ஸினான் முதல் முதலில் பைஅத் செய்தார்கள். வேறு சிலரைப் பொருத்தவரை ஹஸ்ரத் ஸினான் அவர்களின் தந்தையார்தான் முதல் முதலில் பைஅத் செய்தார்கள் என்று கூறுகின்றார்கள்.

எவ்வாறிருப்பினும், வரலாற்றில் வருகின்றது. பைத்தே ரிஸ்வான் சம்பவத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களிடம் பைஅத் வாங்க துவங்கியபோது ஹஸ்ரத் ஸினான் (ரலி) அவர்கள் தனது கையை நீட்டினார்கள். என்னிடம் பைஅத் வாங்குங்கள் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் எந்த விஷயத்தில் என்னிடம் பைஅத் செய்கின்றீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு, ஹஸ்ரத் ஸினான் (ரலி) அவர்கள், உங்களது உள்ளத்தில் உள்ள விஷயத்தின் மீது நாங்கள் பைஅத் செய்கின்றோம் என்று கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், எனது உள்ளத்தில் என்ன உள்ளது என்று உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நட்பில் இருந்ததன் தாக்கம் சஹாபாக்களிடம் இருந்தது. எனவே அவர்கள் கூறினார்கள்: வெற்றி பெற வேண்டும் அல்லது ஷஹாதத்தை அடைய வேண்டும். அந்த அடிப்படையில் நாங்களும் இந்த விஷயத்தின் மீது பைஅத் செய்கின்றோம் என்று மற்ற மக்களும் கூறத் தொடங்கி விட்டனர். ஹஸ்ரத் ஸினான் (ரலி) அவர்களும் இந்த விஷயத்தின் மீது பைஅத் செய்தார்கள்.

(ரவ்ஸுல் அன்ஃப் தொகுதி 4 பக்கம் 62 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது & சீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 26 பாப் ஸிக்ருல் முஆஸிய்யா 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 69 ஸினான் பின் அபீ ஸினான் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 561 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸினான் (ரலி) அவர்கள் முஹாஜிரீன் சஹாபாக்களைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள்.

(சீரத் இப்னு கஸீர் பக்கம் 280 அஸ்மா அஹ்லே பத்ர்.... 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & தாரீஹுல் இஸ்லாம் வ வஃபயாதுல் முஷாஹீர்... தொகுதி 3 பக்கம் 371 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் அரபிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

துலைஹா பின் குவைலத் நபித்துவ வாதம் செய்தவுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முதல் முதலில் ஹஸ்ரத் ஸினான் அவர்கள்தான் கடிதம் எழுதி தகவல் கொடுத்தார்கள்.

(தாரீஹுத் திப்ரா தொகுதி 3 பக்கம் 245... 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

நான் கூறப்போகின்ற இரண்டாவது சஹாபி ஹஸ்ரத் மஹஜா அவர்கள் ஆவார்கள். அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அடிமை ஆவார்கள். பத்ர் போரில் முதலாவது ஷஹீது அன்னார்தான். அன்னார் யமன் நாட்டைச் சார்ந்தவராவார்கள். கைதி என்ற நிலையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடத்தில் கொண்டு வரப்பட்டார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவருக்கு நன்மை செய்தவாறு அவரை விடுதலை செய்து விட்டார்கள்.

அன்னார் முஹாஜிரீன்களில் முதன்மையானவர்களில் ஒருவர் ஆவார்கள். பத்ர் யுத்தத்தில் பங்கு பெற்றிருந்தார்கள். மேலும் ஏற்கனவே கூறப்பட்டது போன்று அன்னார் இஸ்லாமிய படையின் முதலாவது

ஷஹீது என்ற சிறப்பும் அன்னாருக்கு உண்டு. இரண்டு வரிசைகளுக்கு மத்தியில் இருந்தார்கள். திடீரென ஓர் அம்பு அன்னார் மீது பாய்ந்தது. அதனால் அன்னார் ஷஹீதானார்கள். ஆமிர் பின் ஹஜரமி அன்னாரை ஷஹீதாக்கினான்.

ஹஸ்ரத் ஸைது பின் முஸய்யப் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் மஹ்ஜா ஷஹீதானபோது அன்னாரது நாவில் انامهجع والى ربى ارجع – நான் மஹஜாவாவேன். மேலும் நான் எனது இறைவனின் பக்கம் திரும்புகின்றேன். அன்னாரது நாவிலிருந்து இந்த சொற்கள் வெளிவந்தன.அன்னாரைக் குறித்து இந்த வசனமும் இறங்கியது.

وَلَا تَطْرُدِ الَّذِيْنَ يَدْعُوْنَ رَبَّهُمْ بِالْغَدٰوةِ وَالْعَشِيِّ يُرِيْدُوْنَ وَجْهَهٗ – நீர் தனது ரப்பின் திருப்தியை வேண்டியவாறு காலையிலும் மாலையிலும் தனது இறைவனை அழைக்கின்ற மக்களை நீர் விரட்டாதீர்.

இந்த வசனத்தில் ஹஸ்ரத் பிலால், ஹஸ்ரத் சுஹைப், ஹஸ்ரத் குப்பாப், ஹஸ்ரத் உத்பா, ஹஸ்ரத் அம்மார், ஹஸ்ரத் உத்பா பின் ஹஸ்வான், ஹஸ்ரத் அவ்ஸ் பின் கூலி, ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபஹைரா ஆகிய சஹாபாக்களும் அடங்குவர்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 299,300 மஹ்ஜா பின் சாலிஹ் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 268 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & கன்ஸுல் உம்மால் தொகுதி 10 பக்கம் 408 கிதாபுல் கஸ்வாத் ஹதீஸ் எண் 29985 – 1985 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சடிக்கப்பட்டது)

இதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏழைகளை விரட்டி வந்தார்கள் என்று பொருள் கொள்ளக்கூடாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அன்பும், கண்ணியம், மரியாதை மற்றும் பரிவு தன்னிகரற்றதாகும். அதைப்பற்றி நமக்கு நபிமொழிகளிலிருந்தும், சம்பந்தப்பட்ட அந்த ஏழைகளின் கூற்றுகளிலிருந்தும் தெரிய வருகிறது.

இந்த வசனத்தில் எந்த செல்வந்தர்கள் மற்றும் பெரியவர்கள் தமக்கு அதிகமான மதிப்பும் மரியாதையும் கிடைக்க வேண்டும் என்று கருதுகிறார்களோ அவர்களுக்குரிய பதில் உள்ளது. அல்லாஹ் கூறினான்: நான் எமது தூதர்களுக்கு கூறியுள்ளேன். மேலும் கட்டளையிட்டுள்ளேன். அதாவது இறைவணக்கத்திலும் இறைவனை நினைவு கூர்வதிலும் முன்னேறியுள்ள ஏழைகளின் கண்ணியமும் மரியாதையும் அல்லாஹ்வின் பார்வையில் செல்வந்தர்களின் செல்வம் மற்றும் குடும்ப கவுரவத்தை விட மிக உயர்ந்ததாகும். அல்லாஹ்வின் தூதர் தமக்கு அல்லாஹ் எதற்கு கட்டளையிடுகின்றானோ அதனையே அவர் செய்வார்.

எனவே இந்த வசனத்தில் இதற்கான பதில் தரப்பட்டுள்ளது. உண்மையில் எந்த செல்வந்தர்கள் தங்களது அந்தஸ்து மிக உயர்ந்தது என்று கருதினார்களோ அவர்களுக்கு அல்லாஹ் பதிலளித்துள்ளான். அல்லாஹ்வின் தூதருக்கு உங்களுடைய கண்ணியம் மற்றும் செல்வம் ஒரு பொருட்டே அல்ல. அவருக்கு அல்லாஹ்வின் நினைவில் இருக்கின்ற ஏழைகளே அன்பிற்குரியவர்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஆமிர் பின் மஹ்லத் என்பவர் ஆவார். அன்னாருடைய தாயாரின் பெயர் உம்மாரா பின்த் ஹன்ஸா ஆகும். ஹஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவராக அவர் இருந்தார். பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்று உஹது நாளன்று அவர் ஷஹீதானார்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 375,376 ஆமிர் பின் முஹல்லத் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி இவர் ஹாத்திப் பின் அம்ர் பின் அப்தே கைஸ் அப்தே ஷம்ஸ் ஆவார். அபு ஹாதிப் அவரது பட்டப் பெயராகும். அவர் பனூ ஆமிர் பின் லூயி கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார். அன்னாரது தாயாரின் பெயர் அஸ்மா பின்த் ஹாரிஸ் பின்த் நவ்ஃபல் ஆகும். அவர் அஷ்ஜஆ கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார். ஹஸ்ரத் சுஹைல் பின் அம்ர், ஹஸ்ரத் சுலைது பின் அம்ர், ஹஸ்ரத் ஸக்ரான் பிம் அம்ர் ஆகியோர் அன்னாரது சகோதரர்கள் ஆவர். ஹஸ்ரத் ஹாத்திப் பின் அம்ர் அவர்களின் பிள்ளைகளில் அம்ர் பின் ஹாத்திப் ஆவார். அவரது தாயார் வைத்தா பின்த் அல்கமா ஆவார்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 622 ஹாத்திப் பின் அம்ர் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 309 ஹாத்திப் பின் அம்ர் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாரே அர்கத்திற்கு வருவதற்கு முன்னதாக ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் அவர்களின் தப்லீக்கின் மூலமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார். அபிஸீனியா நாட்டின் பக்கம் இரு முறை ஹிஜ்ரத் செய்தார்.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில், முதலாவது ஹிஜ்ரத்தில் எல்லோரையும் விட முதலில் அபிஸீனிய நாட்டிற்கு வந்த முதல் நபர் ஹஸ்ரத் ஹாத்திப் பின் அம்ர் பின் அப்தே ஷம்ஸ் ஆவார். அன்னார் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தபோது ஹஸ்ரத் லுபாபா பின் அப்தே முன்ஸிர் அவர்களின் சகோதரரான ஹஸ்ரத் ஜஃபா பின் அப்துல் முன்ஸிர் அவர்களது வீட்டில் தங்கினார்கள். பத்ர் போரில் தனது சகோதரர் சுலைது பின் அம்ர் அவர்களுடன் இணைந்து பங்கு பெற்றிருந்தார்கள். உஹது போரிலும் பங்கு பெற்றார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 309 ஹாத்திப் பின் அம்ர் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 117–119 பாப் இஸ்லாம் அபீ பக்ர்.... 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாரே இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சவ்தா பின்த் ஸம்ஆ அவர்களுடன் திருமணம் செய்தார்கள். அதனை ஹஸ்ரத் சுலைது பின் அம்ர் அவர்களே நடத்தி வைத்தார்கள். சிலரைப் பொருத்தவரை ஹஸ்ரத் அபூ ஹாத்திப் பின் அம்ர் அவர்கள் நடத்தியதாக கருதுகின்றனர். அப்போது 400 திர்ஹம் மஹ்ர் தொகையாக நிர்ணயிக்கப்பட்டது.

இந்த திருமணத்தைப் பற்றிய விரிவான தகவல் திப்காத்துல் குப்ரா என்ற நூலில் இவ்வாறு இடம் பெற்றுள்ளது. ஹஸ்ரத் சவ்தா அவர்களின் முதலாவது கணவர் ஹஸ்ரத் ஸக்ரான் பின் அமர் அதாவது ஹஸ்ரத் ஹாத்திப் பின் அம்ர் அவர்களின் சகோதரர் ஆவார். அன்னார் அபிஸீனியாவிலிருந்து மக்காவிற்கு திரும்பியபோது மக்காவில் மரணமடைந்தார். ஹஸ்ரத் சவ்தா அவர்கள் இத்தத்தை முழுமை செய்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருமணத்திற்கான தூதுச் செய்தியை அவர்களுக்கு அனுப்பினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் சவ்தா அவர்கள் எனது விவகாரம் உங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களது சமுதாயத்தைச் சார்ந்த ஓர் ஆணை நியமனம் செய்யுங்கள். அவர் உங்களின் திருமணத்தை அதாவது ஹஸ்ரத் சவ்தாவின் திருமணத்தை என்னுடன் நடத்தி வைக்கட்டும் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் சவ்தா அவர்கள் ஹஸ்ரத் ஹாத்திப் பின் அம்ர் அவர்களை நியமனம் செய்தார்கள். இவ்வாறு ஹஸ்ரத் ஹாத்திப் அவர்கள் ஹஸ்ரத் சவ்தா அவர்களின் திருமணத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் செய்து வைத்தார்கள். ஹஸ்ரத் கதீஜா அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருமணம் முடித்த முதல் பெண்மணி ஹஸ்ரத் சவ்தா ஆவார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 661 பாப் ஸிக்ர் அஸ்வாஜ் (ஸல்) சவ்தா பின் ஸம்ஆ (ரலி) – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாரே இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 8 பக்கம் 42 ஸிக்ர் அஸ்வாஜே ரஸூலில்லாஹி (ஸல்) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹுதைபிய்யா இடத்தில் நடைபெற்ற பைஅத்தே ரிஸ்வானிலும் ஹஸ்ரத் ஹாத்திப் அவர்கள் பங்கு பெற்றிருந்தார்கள்.

(கிதாபுல் மகாஸி தொகுதி 2 பக்கம் 92 பாப் கஸ்வா ஹுதைபிய்யா – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த ஒரு சஹாபி அவரின் பெயர் அபூ ஹுஸைமா பின் அவ்ஸ் ஆகும். அன்னாரின் தாயாரின் பெயர் அம்ரா பின்த் மஸ்ஊது ஆகும்.

ஹஸ்ரத் மஸ்வூது பின் அவ்ஸ் அவர்களின் சகோதரர் ஆவார்கள். ஹஸ்ரத் மஸ்வூது பின் அவ்ஸ் அவர்களும் பத்ர் போரில் பங்கு பெற்றிருந்தார்கள். அன்னார் பத்ர் போரிலும் உஹது போரிலும், அகழ் போரிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஏனைய அனைத்துப் போர்களிலும் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் அன்னாரது மரணம் நிகழ்ந்தது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 373 அபூஹஸீமா பின் அவ்ஸ் (ரலி), மஸ்வூது பின் அவ்ஸ் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஒரு சஹாபி ஹஸ்ரத் தமீம் மவ்லா ஹராஷ் ஆகும். இவர் ஹஸ்ரத் தமீம் அஸ் ஹராஷ் அவர்களின் விடுதலை செய்யப்பட்ட அடிமையாக இருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கும் ஹஸ்ரத் குப்பாப் பின் உத்பா அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமைக்கும் இடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தியிருந்தார்கள். பத்ர் மற்றும் உஹது போரிலும் அன்னார் பங்கு பெற்றிருந்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 429 தமீம் மவ்லா ஹராஷ் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த ஒரு சஹாபி ஹஸ்ரத் முன்ஸிர் பின் கதாமா ஆவார்கள். ஹஸ்ரத் முன்ஸிர் பின் கதாமா அவர்களின் தொடர்பு பனூ கனம் என்ற கோத்திரத்தைச் சார்ந்ததாக இருந்தது. அன்னார் பத்ர் மற்றும் உஹது போரில் பங்கு பெற்றிருந்தார்கள். அல்லாமா வாக்தி அவர்களைப் பொருத்தவரை அன்னார் பனூ கைனிகா கைதிகளுக்கு அன்னார் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 6 பக்கம் 172 முன்ஸிர் பின் கதாமா (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 367 முன்ஸிர் பின் கதாமா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த ஒரு சஹாபி ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஹாத்திப் ஆவார்கள். இவர் பத்ர் போர் சஹாபி ஆவார்கள். அவரது பட்டப்பெயர் அபூ அப்துல்லாஹ் ஆகும். அன்னாரின் தாயாரின் பெயர் அமாமா பின்த் சாமித் ஆகும். அவரின் தொடர்பு அன்ஸார் கோத்திரமான அவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்ததாக இருந்தது. ஹஸ்ரத் ஸல்தா பின்த் ஹாத்திப் அவர்களின் சகோதரர் ஆவார். ஹஸ்ரத் ஹாரிஸ் பின் காத்திப் மற்றும் ஹஸ்ரத் அபூ லுபாபா பின் அப்துல் முன்ஸிர் ஆகியோர் ஹுஸூர் (ஸல்) அவர்களுடன் பத்ர் போருக்காக சென்று கொண்டிருந்தனர்.

ரூஹா என்ற இடத்தல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ லுபாபா பின் அப்துல் முன்ஸிர் அவர்களை மதீனாவின் ஆளுநராகவும், ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஹாத்திப் அவர்களை பனூ அம்ர் பின் அவ்ஃப் கோத்திரத்தின் அமீராகவும் நியமனம் செய்து மதீனாவிற்கு திருப்பி அனுப்பினார்கள். ஆனால் அந்த இருவரையும் பத்ர் சஹாபாக்களில் இணைத்தவாறு போரில் வெற்றி பெற்ற செல்வங்களில் அவர்களுக்கும் பங்களித்தார்கள்.

ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஹாத்திப் அவர்களுக்கு பத்ர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட அனைத்து போர்களிலும், பைஅத்தே ரிஸ்வானிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து பங்கு பெறுவதற்கு நற்பாக்கியம் கிடைத்திருந்தது. பத்ர் போரைப் பொருத்தவரை இவர்கள் ஏற்கனவே ஆயத்தமாகி சென்று கொண்டிருந்தார்கள். போரில் நிச்சயம் பங்கு பெறுவோம் என்று அவர்களுக்கு ஏற்கனவே நிய்யத் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களை அமீராக நியமனம் செய்து திருப்பி அனுப்பி இருந்தார்கள். ஆயினும் அவர்களை பத்ர் போரில் பங்கு பெற்ற சஹாபாக்களில் சேர்த்திருக்கின்றார்கள்.

கைபரின் போருக்கிடையில் ஒரு யூதர் கோட்டையின் மேலிலிருந்து அம்பு ஒன்றை எய்தான். அது ஹஸ்ரத் ஹார்ஸா பின் ஹாத்திப் அவர்களது தலையில் பாய்ந்தது. அதன் மூலம் அன்னார் ஷஹீதானார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 598 ஹாரிஸ் பின் ஹாத்திப் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 351 ஹாரிஸ் பின் ஹாத்திப் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஃலபா பின் ஸைது ஒரு சஹாபி ஆவார்கள். அன்னாரின் தொடர்பு அன்ஸார் கோத்திரமான பனூ ஹஸ்ரஜை சார்ந்ததாக இருந்தது. பத்ர் போரிலும் இவர்கள் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் சாபித் பின் அல்ஜஸா அவர்களின் தந்தையாவார்கள். ஹஸ்ரத் சஃலபா பின் ஸைது அவர்களின் பட்டப் பெயர் அல் ஜஸ்ஆ ஆகும். அல் ஜஸ்ஆ என்பது அன்னாரின் உறுதிமிக்க இதயம் மற்றும் உறுதியான மற்றும் தைரியமான எண்ணத்தின் காரணமாக கூறப்படுகின்றது. அதாவது ஜஸா என்பது உறுதிவாய்ந்த ஒரு மரத்தின் கிளைக்கு கூறப்படுவதுண்டு.

எவ்வாறிருப்பினும் மிகவும் உறுதிவாய்ந்த இதயம் படைத்தவராக அன்னார் திகழ்ந்தார்கள். மேலும் உறுதிமிக்கவராகவும் தைரியசாலியாகவும் அன்னார் இருந்தார்கள். அதன் காரணமாக அன்னார் அல் ஜஸ்ஆ என்றும் அழைக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் சஃலபா பின் ஸைது அவர்களிடமிருந்து எந்த அறிவிப்பும் பாதுகாக்கப்படவில்லை.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 467 சஃலபா பின் ஸைது (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 428 சாபித் பின் சஃலபா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & Arabic-English Lexicon by Edward Willian Lane Part 2 page 396 Librairie du liban 1968)

ஹஸ்ரத் உக்பா பின் மஹப் ஒரு சஹாபி ஆவார்கள். ஹஸ்ரத் உக்பா பின் மஹப் அவர்கள் இப்னு அபீ வஹப் என்றும் அழைக்கப்படுவதுண்டு. இவர்களின் கோத்திரமான பனூ அப்தே ஷம்ஸ், அப்தே மனாஃப் கோத்திரத்தின் நட்பு கோத்திரமாகும். பத்ர், உஹது மற்றும் அகழ் போர்கள் உட்பட அனைத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து பங்கு பெற்றுள்ளார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 59 உக்பா பின் வஹப் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 70 உக்பா பின் வஹப் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

மதீனாவில் யூதர்களின் ஒரு குழு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்திப்பதற்காக வந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு தப்லீக் செய்தார்கள். ஆனால் யூதர்களோ இவ்விஷயத்தை ஏற்க மறுத்து விட்டனர். அப்போது உண்மையை ஏற்க மறுத்த, யூதர்களைக் குற்றம் சுமத்திய முதலாவது சஹாபி இவரே ஆவார். அதில் ஹஸ்ரத் உக்பா பின் வஹப் அவர்களும் அடங்குவார்கள்.

இந்த சம்பவம் இவ்வாறு வருகிறது: ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் நுஃமான் பின் அலா மற்றும் பரீ பின் அம்ர் மற்றும் ஷாஷ் பின் அதீ ஆகியோர் வந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களிடத்தில் பேசினார்கள். அவர்களை அல்லாஹ்வின் பக்கம் அழைத்தார்கள். இஸ்லாத்திற்கு அழைப்பு கொடுத்தார்கள். மேலும் தண்டனையைப் பற்றி எச்சரித்தார்கள்.

அப்போது அவர்கள் கூறினார்கள்: நீங்கள் எங்களை எந்த தண்டனையிலிருந்து அச்சுறுத்துகின்றீர்கள். நாங்கள் அல்லாஹ்வின் மகன்களாவோம். மேலும் நாங்கள் அல்லாஹ்விற்கு மிகவும் நேசத்திற்குரியவர்களாவோம். கிறிஸ்தவர்களும் அவ்வாறே கூறுகின்றனர். அல்லாஹ் இவர்களைப் பற்றி இவ்வசனத்தை இறக்கினான்.

அதாவது யூதர்களும் கிறித்தவர்களும், நாங்கள் அல்லாஹ்வின் பிள்ளைகளாவோம். மேலும் நாங்கள் அவனுக்கு மிகவும் நேசத்திற்குரியவர்களாவோம் என்று கூறினர். நீர் அவர்களிடம் கூறுவீராக: அப்படி என்றால் அவன் உங்களின் பாவங்களின் காரணமாக உங்களுக்கு ஏன் தண்டனை வழங்குகின்றான்? எனவே நீங்கள் கூறுவது போல் அல்ல. மாறாக, அல்லாஹ் படைத்தவர்களில் நீங்களும் மனிதர்களே. அவன் தான் நாடியவர்களை மன்னிக்கின்றான். தான் நாடியவர்களைத் தண்டிக்கின்றான். வானம் மற்றும் பூமியின் அரசாட்சியும்

அவ்விரண்டிற்கும் இடைப்பட்ட அரசாட்சியும் அவனுக்கே உரியன. இறுதியில் நாம் அனைவரும் அவன் பக்கமே திரும்பிச் செல்ல இருக்கின்றோம். (5:19)

இப்னு இஸ்ஹாக் அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யூத கூட்டத்தினருக்கு இஸ்லாத்திற்கான அழைப்பை விடுத்தார்கள். அவர்களை அதன் பக்கம் அழைத்து கவனமூட்டினார்கள். அல்லாஹ் அல்லாதவற்றின் விவகாரங்களில் அல்லாஹ்வின் தண்டனை குறித்து அவர்களை எச்சரித்தார்கள். அப்போது அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மட்டுமல்ல. மாறாக, அன்னார் கொண்டு வந்த போதனையையும் நிராகரித்து விட்டனர். அதனால் ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் மற்றும் ஸஅது பின் அபாதா மற்றும் ஹஸ்ரத் உக்பா பின் வஹப் ஆகியோர் அந்த யூதரிடம் கூறினர்.

யூத கூட்டத்தினரே! நீங்கள் அல்லாஹ்விற்கு அஞ்சுங்கள். அவர் அல்லாஹ்வின் தூதர் ஆவார். நீங்கள் அவர் தோன்றுவதற்கு முன்பு அவரைப் பற்றி எங்கள் மத்தியில் பேசி வந்துள்ளீர்கள். எங்களுக்கு அவருடைய பண்புகளை எடுத்துரைத்துள்ளீர்கள்.

அப்போது ராஃபி பின் ஹரீம்லா மற்றும் வஹப் பின் யஹூஸா கூறினார்கள்: நாங்கள் இவரைப் பற்றி கூறவில்லை. மேலும் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு எந்தவொரு வேதமும் இறங்கியதாகவும் இறங்கப் போவதாகவும் கூறியதில்லை. அதே போன்று ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு அல்லாஹ் நற்செய்தி வழங்கக்கூடிய மற்றும் அச்சமூட்டி எச்சரிக்கக்கூடிய எவரையும் அனுப்பப் போவதில்லை.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 265,266 பாப் மாநஸல ஃபில் முனாஃபிகீன் வ யஹூத் – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாரே இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது)

ஆக இந்த மக்கள் ஒரு வகையில் தெளிவாக நிரகாரித்து விட்டனர். ஆனால் தவ்ராத்தில் தெளிவான முன்னறிவிப்புகள் உள்ளன. இன்றைய முஸ்லிம்களின் நிலையும் இதுபோன்றே உள்ளது. அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹை நிராகரிக்கின்றார்கள். ஆரம்பத்தில் கூச்சலிட்டு வந்தனர். ஆனால் இப்போது எவரும் வர மாட்டார் என்று கூறுகின்றனர்.

ஹஸ்ரத் ஹபீப் பின் அஸ்வத் ஒரு சஹாபி ஆவார். ஹஸ்ரத் ஹபீப் பின் அஸ்வத் பின் சஅது அன்ஸார் கோத்திரமான பனூ ஹராமால் விடுவிக்கப்பட்ட அடிமை ஆவார். பத்ர் போரிலும், உஹது போரிலும் அவர் கலந்து கொண்டிருந்தார். அவருக்கு பிள்ளைகள் கிடையாது. குபைப் என்ற பெயரிலும் அவரது பெயர் வரலாற்றில் நினைவு கூறப்பட்டுள்ளது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 429 ஹபீப் பின் அல் அஸ்வத் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 22 பக்கம் 18 ஹபீப் பின் அல் அஸ்வத் (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 671 ஹபீப் பின் அல் அஸ்வத் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஹஸ்ரத் உஸைமா அன்ஸாரி சஹாபி ஆவார். ஹஸ்ரத் ஹுஸைமாவின் தொடர்பு பனூ அஷ்ஜஆ கோத்திரத்தைச் சார்ந்ததாக இருந்தது. பத்ர், உஹது மற்றும் அகழ் போர்கள் உட்பட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அனைத்து போர்களிலும் பங்கு பெற்றுள்ளார். ஹஸ்ரத் முஆவிய்யா பின் அபீ சுஃப்யான் காலத்தில் அன்னாரின் மரணம் நிகழ்ந்தது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 377 உஸைமா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ராஃபி பின் ஹாரிஸ் ஒரு சஹாபி ஆவார். அவரது பெயர் ராஃபி பின் ஹாரிஸ் பின் சவாது ஆகும். அன்ஸார் கோத்திரமான பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சார்ந்தவராக அவர் இருந்தார். பத்ர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அனைத்து போர்களிலும் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் அன்னார் மரணமடைந்தார்கள். ஹஸ்ரத் ராஃபி பின் ஹாரிஸ் அவர்களுக்கு மகன் ஒருவர் இருந்தார். அவரது பெயர் ஹாரிஸ் ஆகும்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 371 உஸைமா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது

அடுத்து ருஹைலா பின் சால்பா அன்ஸாரி மற்றும் பத்ர் போர் சஹாபி ஆவார். அவரது பெயரும் பல வகைகளில் கூறப்பட்டுள்ளது. சிலர் ரகீலா என்றும் வேறு சிலரோ ருஹைலா என்றும் கூறுகின்றனர். அன்னாரின் தந்தை பெயர் சஃலபா பின் காலித் ஆகும். பத்ர் மற்றும் உஹது போரில் பங்கு பெற்றார்கள். அவரின் தொடர்பு ஹஸ்ரஜ் கோத்திரத்தின் ஒரு கிளையான பனூ பயாலாவைச் சார்ந்ததாக இருந்தது. அன்னார் ஹஸ்ரத் அலி அவர்களுடன் ஸஃப்ஃபைன் போரிலும் பங்கு பெற்றார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 273 ருஹைலா பின் சஃலபா (ரலி) தொகுதி 1 பக்கம் 509 ஜப்லா பின் சஃலபா (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 430 ருஹைலா பின் சஃலபா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் பின் ரியாப் ஒரு சஹாபி ஆவார். அன்ஸார்களில் முதல் முதலில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட ஏழு நபர்களில் ஜாபிர் அவர்களும் அடங்குவார். ஹஸ்ரத் ஜாபிர் அவர்கள் பத்ர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட ஏனைய அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பங்கு பெற்றார்கள். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து பல அறிவிப்புகளையும் செய்துள்ளார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 431 ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பைஅத்தே உக்பா மற்றும் ஊலா நிகழ்வின்போது அன்ஸாரிகளிலிருந்து முதல் முதலில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டவர் இவரே ஆவார். அன்ஸார்களில் சிலர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உக்பா ஊலாவின் இரவில் சந்தித்தார்கள்.

அப்போது அன்னார் நீங்கள் எந்த கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அன்னார், முழு விவரத்தையும் எடுத்துக் கூறினார்கள். பனூ நஜ்ஜார் கோத்திரத்தின் ஆறு நபர்களே இருந்தனர். ஸஅது பின் லராரா, அவ்ஃப் பின் ஹாரிஸ் பின் ரஃபாஆ பின் அவ்ஃப்ர் மற்றும் ராஃபி பின் மாலிக் பின் அஜ்லான் மற்றும் கத்பா பின் ஆமிர் பின் அதீதா மற்றும் உக்பா பின் ஆமிர் பின் நாவி பின் ஸைது மற்றும் ஜாபிர் பின் அப்துல்லாஹ் ஆகியோர் அடங்குவர். இந்த அனைத்து மக்களும் முஸ்லிமாகி இருந்தார்கள். இவர்கள் மதீனாவிற்கு வந்தபோது மதீனாவாசிகளிடம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி கூறினார்கள். மேலும் அங்கு தப்லீக்கும் செய்தனர்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 492 ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சாபித் பின் இக்ரம் பின் சஃலபா ஒரு பத்ர் போர் சஹாபி ஆவார்கள். அவரது பெயர் ஹஸ்ரத் சாபித் பின் இக்ராம் பின் சஃலபா பின் அதீ பின் அஜ்லான் ஆகும். பனூ அம்ர் பின் அவ்ஃப் என்ற அன்ஸாரி கோத்திரத்தைச் சார்ந்தவராவார். அன்னார் பத்ர் உட்பட அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பங்கு பெற்றுள்ளார்.

(அல் இஸ்திஆப் தொகுதி 1 பக்கம் 199 சாபித் பின் இக்ரம் (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வந்தபோது ஆஸிம் பின் அதீ அவர்களுக்கு பள்ளிவாசலைக் கொடுத்து இதில் ஓரிடத்தில் உங்கள் வீட்டை கட்டிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஆனால் ஆஸிம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் இந்த பள்ளிவாசலை வீடாக மாற்ற மாட்டேன் என்று கூறினார். இதில்

அல்லாஹ் எதனை இறக்க வேண்டுமோ அதனை இறக்கியுள்ளான். வேண்டுமென்றால் நீங்கள் இதனை சாபித் பின் இக்ராம் அவர்களுக்கு வழங்கி விடுங்கள் என்றும் கூறினார். ஏனென்றால், அவருக்கு சொந்த வீடு எதுவும் இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சாபித் பின் இக்ராமிற்கு அந்த இடத்தைக் கொடுத்து விட்டார்கள். அவருக்கு பிள்ளைகள் ஏதுவும் கிடையாது. (சபலுல் ஹுதா வர் ரிஷாத் தொகுதி 5 பக்கம் 677... 1992 ஆம் ஆண்டு காஹிராவில் அச்சிடப்பட்டது)

ஏறக்குறைய பள்ளிவாசலில் அங்கமான ஓர் இடமே அவருக்கு கொடுக்கப்பட்டது. அல்லது பள்ளிவாசலுக்கு மிக மிக அருகிலிருந்த ஓர் இடமே அவருக்கு கொடுக்கப்பட்டது. ஏதவாதொரு சந்தர்ப்பத்தில்தான் அங்கு தொழுகையும் நடத்தப்பட்டு வந்தது.

எவ்வாறிருப்பினும் மொழியாக்கம் செய்யக்கூடியவர்கள் செய்துள்ள மொழியாக்கம் எனது பார்வையில் சரியானதாக இல்லை. சில விஷயங்களின் விளக்கம் இருக்கின்றது. எனவே Research cell பிரிவைச் சார்ந்தவர்கள் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். இதனை ஆய்வு செய்து சரியான முறையில் எனக்கு அனுப்பி வைக்க வேண்டும். வெறும் பள்ளிக் குழந்தைகளைப் போன்று மொழியாக்கம் செய்யாதீர்கள்.

பிறகு மூத்தா போரில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹாவின் ஷஹாதத்திற்குப் பிறகு இஸ்லாமிய கொடியை ஹஸ்ரத் சாபித் பின் இக்ராம் அவர்கள் ஏற்றிப் பிடித்தார்கள். மேலும் முஸ்லிம் கூட்டத்தினரே! உங்களில் ஒருவரை உங்களது தலைவராக ஆக்கிக் கொள்ளுங்கள் என்றும் கூறினார். மக்கள் கூறினர்: நாங்கள் உங்களை ஆக்க விரும்புகின்றோம். அதற்கு அவர், என்னால் அவ்வாறு செய்ய முடியாது என்று கூறினார். அப்போது காலித் பின் வலீது அவர்களை தமது தலைவராக ஆக்கிக் கொண்டார்கள். இப்னு ஹஷாம் சீரத்துன் நபியில் இதுபற்றி கூறப்பட்டுள்ளது.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 533 பாப் ஸிக்ர் கஸ்வா மூத்தா – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாரே இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது)

வரலாற்றில் வருகின்றது. மூத்தா போர் சந்தர்ப்பத்தின்போது முஸ்லிம்கள் எதிரி படையினரை கண்டனர். எதிரிகளின் எண்ணிக்கையும், அவர்களின் போர் தளவாடங்களையும் பார்த்து இந்த படையை எவராலும் எதிர்கொள்ள முடியாது என்று எண்ணினர்.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் மூத்தா போரில் பங்கு பெற்றேன். எதிரி எங்களுக்கு அருகில் வந்த உடன் நாங்கள் பார்த்தோம். அவர்கள் எண்ணிக்கையிலும், ஆயுதங்களிலும், குதிரைகள் மற்றும் தங்கம் மற்றும் பட்டாடை போன்றவற்றிலும் அவர்களை எதிர்த்து போரிடுவது எவராலும் முடியாத காரியமாகும். இதைப் பார்த்து எனது கண்கள் சோர்ந்து விட்டன. அப்போது சாபித் பின் இக்ராம் என்னிடத்தில் கூறினார்கள்: அபூ ஹுரைராவே! நீர் மிகப்பெரிய ஒரு படையைப் பார்த்தது போன்று உமது கண்கள் ஆகிவிட்டன. அதற்கு ஹஸ்ரத் அபூ ஹுரைரா அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஆமாம் என்று கூறினேன். அப்போது ஹஸ்ரத் சாபித் அவர்கள் கூறினார்கள்: நீங்கள் எங்களுடன் பத்ர் போரிலும் பங்கு பெற்றிருந்தீர்கள். அங்கும் அதிகமான எண்ணிக்கையின் மூலமாக நமக்கு வெற்றி கிடைக்கவில்லை.

(சபலுல் ஹுதா வர் ரிஷாத் தொகுதி 6 பக்கம் 148... 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மாறாக, அல்லாஹ்வின் அருளாலேயே நமக்கு வெற்றி கிடைத்தது. இங்கும் அதுவே நடைபெறும்.

ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் முர்த்தாகிப் போன மக்களை எதிர்கொள்ள ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்களுடன் சென்றனர். ஹஸ்ரத் காலித் பின் வலீத் மக்களை எதிர்ப்பதற்காக வெளியேறிய சமயத்தில் பாங்கு ஓசை கேட்டால் தாக்குதல் நடத்த மாட்டார்கள். பாங்கு ஓசை கேட்காவிட்டால் தாக்குதல் நடத்துவார்கள். அன்னார் இந்த சமுதாயத்திடம் அனுப்பி வைக்கப்பட்டார்கள். அந்த சமுதாயம் பதாகா என்ற இடத்தில் இருந்தது. அன்னார் ஹஸ்ரத் உக்காஷா பின் மஹ்ஸன் மற்றும் ஹஸ்ரத் சாபித் பின் அக்ரம் எதிரிகளைப் பற்றி செய்தியை சேகரித்து வர இருவரையும் ஒற்றராக அனுப்பி வைத்தார்கள். இருவரும் குதிரையில் சவாரி செய்தனர். ஹஸ்ரத் உக்காஷாவின் குதிரையின் பெயர் அஸ்ஸராம் ஆகும். சாபித் அவர்களின் குதிரையின் பெயர் அல் முஹ்பிர் ஆகும். எவ்வாறிருப்பினும் இரு பிரிவினரும் எதிர் எதிரே நின்றனர். துலைஹா மற்றும் அவரது சகோதரர் சலமா அவர்களை நேரடியாக சந்தித்தனர். அவர்கள் இருவரும் இதேபோன்று செய்தி சேகரித்து வருவதற்காக அனுப்பபட்டிருந்தார்கள். துலைஹாவை ஹஸ்ரத் உக்காஷா அவர்கள் எதிர்கொண்டார்கள். சலமாவை ஹஸ்ரத் சாபித் அவர்கள் எதிர் கொண்டார்கள். இந்த இரு சகோதரர்களும் அந்த இரு சஹாபிகளை ஷஹீதாக்கி விட்டார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. நாங்கள் 200 சவாரிகளைக் கொண்ட படையினர் முன்னே முன்னே சென்று கொண்டிருந்தோம். ஸைது பின் கத்தாப் எங்களின் அமீராக இருந்தார். சாபித் மற்றும் உக்காஷா எங்களுக்கு முன்னால் இருந்தனர். நாங்கள் அவர்களை கடந்து சென்றபோது அந்த காட்சி பார்ப்பதற்கு எங்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது. ஏனென்றால் அவர்களின் ஷஹாதத் சம்பவத்திற்குப் பிறகுதான் அந்த படை அந்த இடத்தை கடந்து சென்றது. ஹஸ்ரத் காலித் மற்றும் ஏனைய முஸ்லிம்கள் எங்களுக்குப் பின்னால் இருந்தனர். நாங்கள் அந்த கொலை செய்யப்பட்டவர்களுக்கு அருகில் நின்று கொண்டிருந்தோம். ஹஸ்ரத் காலித் அவர்கள் வந்தார்கள். அவர்களின் கட்டளைக்கேற்ப நாங்கள் சாபித் மற்றும் உக்காஷா அவர்களை இரத்தம் படிந்த ஆடைகளுடன் அங்கேயே அடக்கம் செய்து விட்டோம்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 355,356 சாபித் பின் இக்ரம் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அறிவிப்பில் வருகிறது. துலைஹா முஸ்லிம் ஆன உடன் ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவர்களிடத்தில் கூறினார்கள்: நான் உங்கள் மீது அன்பு கொள்ளவில்லை. அன்பு கொள்ளவும் மாட்டேன். நீங்கள் முஸ்லிம்களாகிய ஹஸ்ரக் உக்காஷா, ஹஸ்ரத் சாபின் பிக் இக்ராம் அவர்களை கொலை செய்திருக்கின்றீர்கள். துலைஹா கூறினார்: அமீரல் முஃமினீன் அவர்களே! எனது கரங்களின் மூலமாக அல்லாஹ் அவர்களுக்கு கண்ணியத்தை வழங்கியுள்ளான்.

(சுனன் அல் கிப்ரா லில்பைஹக்கி தொகுதி 8 பக்கம் 580,581 கிதாபுல் அஷ்ரபா.... ஹதீஸ் எண் 17631 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அவர்களுக்கு எந்த பிள்ளைகளும் இல்லை.

முஹம்மது பின் உமர் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் சாபித் அவர்களை துலைஹா ஹிஜ்ரி 12–ஆம் ஆண்டு பதாஹா என்ற இடத்தில் ஷஹீதாக்கினார்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 355,356 சாபித் பின் இக்ரம் (ரலி)– 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சல்மா பின் சலாமா பத்ர் போர் சஹாபி ஆவார். அவ்ஸ் கோத்திரத்தின் குடும்பத்தினராகிய பனூ அவ்ஸ் கோத்திரத்தின் பனூ அஷ்அர் கோத்திரத்தோடு தொடர்புடையவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருவதாக தகவல் கிடைத்தது. அப்போது அவர்கள்தான் மக்களில் முதன் முதலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டார்கள்.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 391 சல்மா பின் சலாமா – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

அன்னார் பைஅத்தே உக்பா மற்றும் ஊலா மற்றும் சானியா மூன்றிலும் பங்கு பெற்றிருந்தார்கள். மேலும் பத்ர் உட்பட அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள், அன்னாரை தமது கிலாஃபத் காலகட்டத்தில் யமாமா நாட்டினுடைய ஆட்சியாளராக நியமித்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 523 சல்மா பின் சலாமா (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

உம்ர் பின் கதாதா கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சல்மா பின் சலாமா மற்றும் அபூ ஸப்சா பின் அபீ ரகம் இடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். ஆனால் இப்னு

இஸ்ஹாக்கின் கருத்தின்படி சல்மா பின் சலாமா மற்றும் ஹஸ்ரத் சுபைர் பின் அல்அவாம் அவர்களுக்கிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 335 சல்மா பின் சலாமா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அன்னார் தனது குழந்தைப் பருவத்தின் ஒரு சம்பவத்தை தானே கூறி வந்தார்கள். நான் சிறுவனாக இருந்தபோது எனது குடும்பத்தைச் சார்ந்த சிலர் அமர்ந்திருந்தனர். ஒரு யூத அறிஞர் அப்போது அங்கு வந்தார். அவர் எங்களிடம், மறுமை குறித்தும் கேள்வி கணக்கு குறித்தும், சொர்க்கம் நரகம் குறித்தும் கூறத் தொடங்கினார். மேலும் இணை வைப்பவர்களும் சிலை வணங்கிகளும் நரகத்திற்கு சென்று விடுவர் என்று கூறினர். அன்னாரின் குடும்பத்தினர்கள் சிலை வணங்கிகளாக இருந்த காரணத்தினால் மரணத்திற்குப் பிறகு மக்கள் மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்ற உண்மையை புரிய முடியாதவர்களாக இருந்தனர். அவர்கள் அந்த யூத அறிஞரிடம் உண்மையிலேயே மரணத்திற்குப் பிறகு மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவோமா என்று கேட்டனர்.

மறுமை வாழ்க்கையை குறித்து அவர்களுக்கு எந்த சிந்தனையும், தனது செயல்களுக்குரிய கூலி வழங்கப்படும் என்ற சிந்தனையும் அவர்களுக்கு இல்லாமல் இருந்தது. யூத அறிஞர் கூறினார்: ஆம்! நீங்கள் மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவீர்கள். அதற்கு அவர்கள் அதற்கான அடையாளம் என்ன? என்று கேட்டார்கள். அதற்கு அந்த யூத அறிஞர் என்னை நோக்கி சைகை செய்தவாறு, இதோ இந்த குழந்தை சிறியவனாக இருக்கின்றான். இவன் பெரியவனாகி விடும்போது இவன் நிச்சயமாக அந்த நபியை கண்டு கொள்வான் என்று கூறினார்.

ஹஸ்ரல் சல்மா அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த சம்பவம் நடந்து சில ஆண்டுகளே கழிந்த நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகை பற்றிய தகவல் எங்களுக்குக் கிடைத்து. மேலும் நாங்கள் அனைவரும் ஈமான் கொண்டு விட்டோம். சிலை வணங்கிகளாகவும், நெருப்பு வணங்கிகளாகவும் இருந்த அனைவரும் ஈமான் கொண்டனர். அப்போது அந்த யூத அறிஞரும் உயிருடன் இருந்தார். அவர் உயிருடன் இருந்த போதிலும் பொறாமையின் காரணமாக அவர் நம்பிக்கை கொள்ளவில்லை என்று கூறுகின்றனர்.

நீங்கள்தான் எங்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வருகையைப் பற்றிய செய்தியை கூறினீர்கள். இப்போது நீங்களே ஈமான் கொள்ளவில்லையே? என்று நாங்கள் அவரிடம் கேட்டபோது, நான் கூறிய நபி இவர் அல்ல என்று அவர் கூறினார். இதே நிலையில் குஃப்ரிலிருந்தவாறே அவர் மரணித்து விட்டார்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் குழப்பங்கள் தலை தூக்கிய போது அன்னார் தனிமையை மேற்கொண்டார்கள். மேலும் தங்களை முழுமையாக இறைவணக்கத்தில் ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

(ரஹ்மத் தாரைன் கே சவ் ஷதாயி பக்கம் 574–576, தாலிப் அல்ஹாஷிமி அல்பத்ர் 2003 ஆம் ஆண்டு லாஹூரில் அச்சிடப்பட்டது)

ஏனென்றால் அப்போது குழப்பம் அதிகமாக பரவிக் கொண்டிருந்தது. இறை வணக்கம் மட்டுமே செய்து வந்தார்கள். அவர்களது மரணத்தைப் பற்றி கருத்து வேறுபாடு உள்ளது. சிலர் ஹிஜ்ரி 34–ஆம் ஆண்டு இறந்ததாகவும், வேறு சிலரோ ஹிஜ்ரி 45–ஆம் ஆண்டு இறந்ததாக கூறுகின்றனர். மரணிக்கின்றபோது அவருடைய வயது 74–ஆக இருந்தது. மேலும் அன்னார் மதீனாவில் மரணித்தார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 125 சல்மா பின் சலாமா (ரலி) – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஹஸ்ரத் ஜபர் பின் அதீக் என்ற பத்ர் போர் சஹாபி ஆவார். பத்ர் உட்பட ஏனைய அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அவர் கலந்து கொண்டுள்ளார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் வரை அவர் மதீனாவில்தான் தங்கியிருந்தார். ஹஸ்ரத் ஜபர் பின் அதீக் அவர்களின் இயற்பெயர் அப்துல்லாஹ் ஆகும். அதீக் மற்றும் அப்துல்லாஹ் ஆகிய இரண்டு மகன்களும் உம்மே சாபித் என்ற மகளும் அன்னாருக்கு இருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஜபர் பின் அதீக் மற்றும் குப்பாப் பின் அர்த் இருவருக்குமிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

மக்கா வெற்றி கொள்ளப்பட்ட சமயத்தில் பனூ முஆவிய்யா பின் மாலிக்கின் கொடி அன்னாரிடத்தில்தான் இருந்தது. ஹஸ்ரத் ஜபர் பின் அதீகின் மரணம் ஹிஜ்ரி 61–ஆம் ஆண்டு யஸீது பின் முஆவிய்யாவின் காலத்தில் 71–வது வயதில் நிகழ்ந்தது.

(அத்திப்காத்துல் குப்ரா லா பின் சஅது தொகுதி 3 பக்கம் 357 ஜபர் பின் அதீக் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சாபித் பின் சஃலபா அன்னாரது பெயராகும். சாபின் பின் ஜஸர் என்றும் அழைக்கப்பட்டார். அன்னார் 70–அன்ஸார்களுடன் பைஅத்தே உக்பா சானியாவிலும் கலந்து கொண்டார். பத்ர், உஹது மற்றும் அகழ் போரிலும் அவர் பங்கு பெற்றிருந்தார். மேலும் ஹுதைபிய்யா சம்பவத்திலும், கைபர் மற்றும் மக்கா வெற்றியின் சந்தர்ப்பத்திலும், தாயிஃப் போரின் போதும் அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். தாயிஃப் போரில் அன்னார் ஷஹீதாக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் சாபித் தனது தந்தையான ஹஸ்ரத் சஃலபாவுடன் இணைந்து பத்ர் போரிலும் பங்கு பெற்றிருந்தார்.

(அத்திப்காத்துல் குப்ரா லா பின் சஅது தொகுதி 3 பக்கம் 428,429 சாபித் பின் சஃலபா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 324 சஃலபா பின் ஹாரிஸ் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

அடுத்து வரும் சஹாபி ஹஸ்ரத் சுஹைல் பின் வஹப் ஆகும். இவரது பெயர் சுஹைல் பின் வஹப் பின் உமர் பின் ஆமிர் குறைஷி ஆகும். அவரது தாயார் பெயர் தாதா ஆகும். ஆயினும் அவர் பேலா என்ற பெயரால் மிகவும் பிரபலமாகி இருந்தார். எனவே அன்னாரும் இப்ன பேலா என்ற பெயரால் மிகவும் பிரபல்யமானார். எனவே புத்தகத்தில் அன்னாரது பெயர் சுஹைல் பின் பேலா என்றும் வருகின்றது. இவர் குறைஷிய குடும்பத்தின் பனூ ஃபஹர் கோத்திரத்தைச் சார்ந்தவர்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 162 சஹல் பின் பேஸா – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 344 சஃலபா பின் அல்ஹாரிஸ் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அபிஸீனியாவற்கு சென்றார். அங்கு ஒரு நீண்ட காலம் தங்கியிருந்தார். இஸ்லாத்தை வெளிப்படையாக பிரச்சாரம் செய்ய துவங்கியவுடன் மக்காவிற்கு திரும்பி வந்தார். பின்னர் மீண்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு மதீனாவிற்கு சென்று விட்டார்.

(அத்திப்காத்துல் குப்ரா லா பின் சஅது தொகுதி 3 பக்கம் 318 சஃப்வான் பின் பேஸா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சுஹைல் அவர்களது இரண்டாவது சகோதரர் ஹஸ்ரத் ஸஃப்ஃவான் பின் பைலாவும் பத்ர் போரில் பங்கு பெற்றார்கள். பத்ர் போரில் பங்கு பெற்ற போது அன்னாரின் வயது 34–ஆக இருந்தது. உஹது மற்றும் அகழ் போர் உட்பட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அனைத்துப் போர்களிலும் பங்கு பெற்றார்கள். அன்னாரது மூன்றாவது சகோதரர் சஹல் இணை வைப்பவர்கள் சார்பாக பத்ர் போரில் கலந்து கொண்டார்கள்.

அல்லாமா இப்னு ஹிஜ்ர் அஸ்கலானி அவர்கள் எழுதுகின்றார்கள்: சஹல் மக்காவில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருந்தார். ஆனால் யாரிடமும் தான் முஸ்லிம் ஆனதை வெளிப்படுத்தவில்லை. குறைஷிகள் அன்னாரை பத்ர் போருக்கு அழைத்துச் சென்று விட்டார்கள். பின்னர் அன்னார் கைது செய்யப்பட்டார்கள். ஹஸ்ரத் இப்னு மஸ்வூது அவர்கள் அன்னார் குறித்து இவ்வாறு சாட்சியம் வழங்கினார்கள்:

மக்காவில் நான் சஹல் அவர்கள் தொழுவதை பார்த்துள்ளேன். அந்த சாட்சியத்தின் அடிப்படையில் அன்னார் விடுதலை செய்யப்பட்டார்கள். பின்னர் மதீனாவில் அன்னாரது மரணம் நிகழ்ந்தது. அன்னாருடைய மற்றும் சுஹைலுடைய ஜனாஸாவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் தொழ வைத்தார்கள்.

ஹஸ்ரத் சுஹைல் பின் பைலா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக் போர் பயணத்தின்போது சவாரியில் பின்னே அமர்த்தினார்கள். பின்னர் அவர் கூறுகின்றார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிக உரத்த குரலில் சுஹைல் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று முறை இவ்வாறு கூறினார்கள். ஒவ்வொரு முறையும் ஹஸ்ரத் சுஹைல் அவர்கள் லப்பைக் யா ரஸூலல்லாஹ் என்று கூறினார்கள். எந்த அளவுக்கு என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அழைத்ததன் பொருளை மக்களும் புரிந்து கொண்டார்கள். மேலும் எவர்கள் முன்னே அமர்ந்திருந்தார்களோ அவர்கள் அன்னாரை நோக்கி சென்றார்கள். மேலும் எவர்கள் பின்புறம் அமர்ந்திருந்தார்களோ அவர்கள் அன்னாருக்கு அருகில் நெருக்கமாக அமர்ந்தார்கள். இது மக்களை அழைப்பதற்கும் அவர்களுக்கு கவனமூட்டுவதற்குமான வழிமுறையாக இருந்தது.

இவ்வாறு மக்கள் ஒன்று கூடிய பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை என்றும் அவன் ஒருவனே என்றும் அவனுக்கு இணை எவரும் இல்லை என்றும் எவர் சாட்சி கூறினாரோ அவருக்கு அல்லாஹ் நெருப்பை ஹராமாக்கி விடுவான்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 162,163 ஸஹல் பின் பேஸா – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 176 சுஹைல் பின் அஸ்மத் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது) & அத்திப்காத்துல் குப்ரா லா பின் சஅது தொகுதி 3 பக்கம் 317 சுஹைல் பின் பேஸா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

இந்த வரலாற்று புத்தகத்தை முஸ்லிம்களும் படிக்கின்றனர். முஸ்லிம் யார் என்பதற்கான விளக்கம் இதில் உள்ளது. ஆனால் அவர்களின் செயல் இதற்கு எதிராக உள்ளது. மேலும் இவ்விஷயத்தில் அவர்கள் வழங்குகின்ற மார்க்க தீர்ப்புகளும் இதற்கு எதிராகவே உள்ளன.

ஹஸ்ரத் அனஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பேரித்தம் பழத்திலிருந்து தயாரிக்கப்படக்கூடிய ஃபஸீ என்ற மதுவைத் தவிர வேறு எந்த மதுவும் எங்களிடத்தில் இருந்ததில்லை. ஒருமுறை அபூ தல்ஹா அவர்களுக்கும் வேறு சில நபர்களுக்கும் நான் அந்த மதுவை வழங்கிக் கொண்டிருந்தேன். அப்போது ஒருவர் வந்து கூறினார்: உங்களுக்கு செய்தி வந்து விட்டதா? என்று கேட்டார். அதற்கு என்ன செய்தி என்று கேட்டோம். அதற்கு அவர் கூறினார்: மது ஹராமாக்கப்பட்டு விட்டது. யாருக்கு மது வழங்கப்பட்டுக் கொண்டிருந்ததோ அவர்கள் அனஸ், மது பானங்களை உடைத்து விடுங்கள் என்று கூறினர்.

அந்த நபர் இந்த செய்தியை வழங்கிய பிறகு அவர்களில் யாரும் மதுவைக் கேட்கவும் இல்லை. அதன் பிறகு ஒருபோதும் மதுவை குடித்ததும் இல்லை.

(சஹீஹுல் புகாரி கிதாபுத் தஃப்ஸீர்.... ஹதீஸ் எண் 4617)

ஒரு கட்டளை வந்தது. அந்த கட்டளைக்குப் பிறகு எப்படிப்பட்ட கட்டுப்படுதல் வெளிப்பட்டது என்றால் மீண்டும் ஒருபோதும் மதுவைப் பற்றிய பேச்சு கூட பேசப்படவில்லை.

மற்றொரு ஹதீஸிலிருந்து நிரூபணமாகின்றது. ஹஸ்ரத் அபூ தல்ஹா அவர்களுடன் ஹஸ்ரத் அபூ தஜ்ஜானா மற்றும் ஹஸ்ரத் சுஹைல் பின் பைழா இருவரும் அப்போது மது அருந்திக் கொண்டிருந்தனர்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் அஸ்ரபா... ஹதீஸ் எண் 5600)

தபூக் போரிலிருந்து திரும்பியவுடன் ஹிஜ்ரி 9–ஆம் ஆண்டு அன்னாரது மரணம் நிகழ்ந்தது. அன்னாரின் ஜனாஸா தொழுகையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மஸ்ஜிது நபவியில் தொழ வைத்தார்கள். அன்னாரது மரணத்தின்போது அன்னாருக்கு பிள்ளைகள் யாரும் இருக்கவில்லை.

(அத்திப்காத்துல் குப்ரா லா பின் சஅது தொகுதி 3 பக்கம் 317 சுஹைல் பின் பேஸா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்பாத் பின் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் சஅது பின் அபீ வக்காஸின் ஜனாஸா மஸ்ஜிதை கடந்து செல்ல வேண்டும் என்று வழிகாட்டினார்கள். அதாவது மஸ்ஜிதிற்கு கொண்டு வர வேண்டும் என்று கூறினார்கள். அவ்வாறு செய்கின்ற பட்சத்தில் அன்னாரும் ஜனாஸா தொழுகையில் பங்கு பெற முடியும் எனக் கருதினார்கள். மக்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் இந்த கூற்றை வினோதமானதாக கருதினார்கள். எனவே ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், மக்கள் எவ்வளவு விரைவாக மறந்து விடுகின்றனர் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சுஹைல் பின் பைழாவின் ஜனாஸா தொழுகையை பள்ளிவாசலில்தான் தொழ வைத்தார்கள்.

(முதரஜ்ஜிம் சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஜனாயிஸ்.... ஹதீஸ் எண் 1603 தொகுதி 4 பக்கம் 135 நூர் பவுண்டேஷன்)

திறந்த மைதானத்தில் தொழ வேண்டும் என்பது அன்னாரது எண்ணமாக இருந்தது ஆனால் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் பள்ளிவாசலில் ஜனாஸா தொழுகையை தொழ முடியும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் துஃபைல் பின் ஹாரிஸ் ஒரு சஹாபி ஆவார். ஹஸ்ரத் துஃபைல் தனது சகோதரர் ஹஸ்ரத் உபைதா மற்றும் ஹஸ்ரத் ஹஸீப் அவர்களுடன் பத்ர், உஹது மற்றும் அகழ் உட்பட அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 466 துபைல் பின் அல்ஹாரிஸ் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் துஃபைல் பின் ஹாரிஸ் அவர்களை ஹஸ்ரத் மன்ஸிர் பின் முஹம்மது அவர்களுடன் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். வேறு சில அறிவிப்புகளுக்கேற்ப ஹஸ்ரத் சுஃப்யான் பின் நஸர் அவர்களுடன் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் துஃபல் அவர்களின் மரணம் 70–வது வயதில் ஹிஜ்ரி 32–ஆம் ஆண்டு நிகழ்ந்தது.

(அத்திப்காத்துல் குப்ரா லா பின் சஅது தொகுதி 3 பக்கம் 38 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஒரு சஹாபி ஹஸ்ரத் அபூ சுலைது அஸீரா பின் அமர் ஆவார்கள். ஹஸீரா பின் அம்ர் அவரது பெயராகும். அபூ சுலைது அவர்களது சுட்டுப் பெயராகும். அபூ சுலைது என்ற பெயரால் அவர்கள் மிகவும் பிரபல்யமாகி இருந்தார்கள். அன்னாருடைய தந்தை அம்ர் அவர்களும் அபூ ஹாரிஜா என்ற பெயரால் மிகவும் அறியப்பட்டார்கள். பத்ர் மற்றும் ஏனைய யுத்தங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடனேயே இருந்தார்கள்.

(காஸி முஹம்மது சுலைமான் மன்ஸூர் பூர் அவர்களால் எழுதப்பட்ட அஸ்ஹாபே பத்ர் என்ற நூல் பக்கம் 131 – 2015 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

ஹஸ்ரஜின் கிளை கோத்திரமான அதீ பின் நஜ்ஜாருடன் தொடர்புடையவர்களாக இருந்தார்கள். அன்னாரின் தந்தை அபூ காரிஜா அம்ர் பின் கைஸும் சஹாபி ஆவார். பத்ர் யுத்தத்திலும் பங்கு பெற்றிருந்தார். அன்னாரின் மகனான அப்துல்லாஹ் அவர்கள் அன்னாரிடமிருந்து ஓர் அறிவிப்பை செய்கின்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கழுதைக் கறி உண்பதை தடை செய்திருந்தார்கள். அப்போது ஒரு பானைகளில் கழுதைக் கறி சமைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. நாங்கள் அந்த பானைகளை கீழே கொட்டி விட்டோம்.

(அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 156 அபூசுலைத் அன்ஸாரி – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஃலபா பின் ஹாத்திப் அன்ஸாரி ஒரு சஹாபி ஆவார். அவர் பனூ அம்ர் பின் அவ்ஃப் கோத்திரத்தோடு தொடர்புடையவராக இருந்தார். பத்ர் மற்றும் உஹது போரில் பங்கு பெற்றிருந்தார்.

(காஸி முஹம்மது சுலைமான் மன்ஸூர் பூர் அவர்களால் எழுதப்பட்ட அஸ்ஹாபே பத்ர் என்ற நூல் பக்கம் 136 – 2015 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

அவ்ஸ் கோத்திரத்தின் கிளையான ஏற்கெனவே கூறப்பட்டது போன்று பனூ அம்ர் பின் அவ்ஃப் கோத்திரத்துடன் தொடர்புடையவராக இருந்தார். பத்ர் மற்றும் வேறு சில யுத்தங்களிலும் அவர் கலந்து கொண்டதற்கான அறிவிப்பு வரலாற்றில் கிடைக்கின்றது.

(சஹாபா கராம் கா என்சயிக்லோபீடியா – டாக்டர் சுல்ஃபிகார் பக்கம் 450 சஃலபா பின் ஹாத்திப் அன்ஸாரி – லாஹூரிலுள்ள பைத்துல் உலூமில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அமாமா பஹ்லி அறிவிக்கின்றார்கள்: சஃலபா பின் ஹாத்திப் அன்ஸாரி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்து கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு அல்லாஹ் செல்வத்தை வழங்க துஆ செய்யுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் வேதனையாக உள்ளது. மிகக் குறைந்த மக்கள்தான் அல்லாஹ்விற்கு நன்றி கூறுகின்றனர். மேலும் செல்வத்தை சமாளிக்கின்ற ஆற்றல் அவர்களுக்கு இருப்பதில்லை என்று கூறி துஆ செய்யவில்லை. சிறிது நேரம் கழித்து அவர் மீண்டும் வந்து அல்லாஹ் எனக்கு செல்வத்தை வழங்குவதற்காக துஆ செய்யுங்கள் என்று கூறினார்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களுக்கு எனது அழகிய நடைமுறை போதுமானதாக இல்லையா? செல்வத்திற்கு ஏன் ஆசைப்படுகின்றீர்கள் என்று கேட்டார்கள். மேலும் கூறினார்கள்: எந்த இறைவனின் கரத்தில் எனது உயிர் உள்ளதோ அவனது இருப்பின் மீது ஆணையாக! நான் இந்த இரண்டு மலைகளையும் எனக்காக தங்கமாகவும், வெள்ளியாகவும் ஆக வேண்டும் என்று கூறினால் அது ஆகிவிடும். ஆனால் நான் அவ்வாறு செய்வதில்லை. செல்வத்தின் மீது அந்த அளவிற்கு நேசம் கொள்ளக்கூடாது என்றும் கூறினார்கள்.

பின்னர் மூன்றாம் முறையாக அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்து கூறினார்: இறைவன் உங்களை உண்மையுடன் அனுப்பியுள்ளான். இறைவன் எனக்கு செல்வத்தை வழங்க எனக்காக துஆ செய்யுங்கள் என்று வேண்டினார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஃலபாவிற்கு செல்வம் கிடைக்க துஆ செய்தார்கள்.

அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்: அப்போது அவர்களிடத்தில் சில ஆடுகளே இருந்தன. ஆனால் அதன் பிறகு அதில் எந்த அளவுக்கு பரக்கத் ஏற்பட்டது என்றால் எவ்வாறு புழுக்களும் கிருமிகளும் பல்கிப் பெருகுகின்றனவோ அதுபோன்று அதிகமாகி விட்டன.

அதன் பிறகு அந்த நபர் லுஹர் மற்றும் அஸர் தொழுகைக்கு பள்ளிக்கு வருவதை விட்டு விட்டார். வீட்டிலேயே தொழுது கொண்டார். மேலும் இந்த நிலை அதிகமானது. எந்த அளவுக்கு என்றால் ஜுமுஆவிற்கு வருவதையும் நிறுத்திக் கொண்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜுமுஆ நாளன்று மக்களின் நலத்தை விசாரித்து வருகின்றார்கள். அப்போது சஃலபாவைப் பற்றி கேட்கப்பட்டது. அதற்கு மக்கள் கூறினர்: அவரிடத்தில் எந்த அளவுக்கு ஆட்டு மந்தை பெருகி விட்டது என்றால் முழு நகரமும் நிறைந்து விட்டது. அதனை சமாளிப்பதிலேயே நேரம் கழிந்து விடுகிறது. எனவே அவர் வருவதில்லை என்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனைக் கேட்டு வேதனையை வெளிப்படுத்தினார்கள். மூன்று முறை தமது வேதனையை வெளிப்படுத்தினார்கள்.

பின்னர் ஸக்காத் வசூல் செய்வது தொடர்பான வசனங்கள் இறங்கியதும் ஸக்காத் வசூல் செய்ய இரண்டு நபர்களை அனுப்பி வைத்தார்கள். அந்த மக்கள் சஃலபா அவர்களிடம் சென்றார்கள். அப்போது அவர் பல சாக்குப் போக்குகளைக் கூறினார். ஸக்காத் கொடுக்கவில்லை. நான் யோசித்துக் கூறுகின்றேன். நீங்கள் ஸக்காத் வசூலிக்க வேறு இடங்களுக்கு செல்கின்றீர்கள். சென்று விட்டு வாருங்கள். அப்போது பார்க்கலாம் என்று கூறினார். அந்த மக்கள் மற்ற இடங்களுக்கு சென்று ஸக்காத் வசூல் செய்து விட்டு வந்தனர்.

ஓரிடத்தில் ஒரு நபர் தமது சிறந்த ஒட்டகங்களில் ஒரு ஒட்டகத்தை ஸக்காத்தாக கொடுத்தார். அதற்கு நாங்கள், உங்களிடத்தில் சிறந்த ஒன்றை கேட்கவில்லை என்று கூறினர். அதற்கு அவர் கூறினார்: நான் மன மகிழ்ச்சியோடு தருகின்றேன். இதனைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார். எவ்வாறிருப்பினும் இது ஒரு நீண்ட சம்பவமாகும். அவர்கள் திரும்பி வந்து ஸக்காத் கேட்ட போது அவர் ஸக்காத் கொடுக்கவில்லை. ஸக்காத் வசூல் செய்வதற்கு சென்றவர்கள் திரும்பி வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் ரிப்போர்ட் செய்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அதன் பின்னர் இந்த வசனம் இறங்கியது. சூரா தவ்பாவின் 75 முதல் 77 வரையுள்ள முழு வசனமும் இறங்கியது. அப்போது சஃலபாவின் ஒரு அன்பிற்குரிய ஒருவரும் அங்கு அமர்ந்திருந்தார். இந்த விஷயத்தைக் கேட்டதும் அவர் சஃலபாவிடத்தில் சென்று, சஃலபாவே! உம் மீது வேதனை ஏற்படுகின்றது. அல்லாஹ் உம்மைப் பற்றி இன்ன இன்ன வசனங்களை இறக்கியுள்ளான் என்று கூறினார். சஃலபா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்று என்னிடமிருந்து ஸக்காத்தை பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இப்போது உம்மிடமிருந்து ஸக்காத் வசூல் செய்வதிலிருந்து இறைவன் என்னை தடுத்து விட்டான் என்று கூறினார்கள்.

எனவே அவர் தோல்வியடைந்தவராக வீடு திரும்பினார். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களது காலத்திலும் ஸக்காத்தை எடுத்துக் கொண்டு சென்றார். அபூபக்ர் அவர்களும் ஒப்புக் கொள்ளவில்லை. ஹஸ்ரத் உமர் அவர்கள் காலத்திலும் சென்றார். அன்னாரும் ஒப்புக் கொள்ளவில்லை. எந்த விஷயத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மறுத்து விட்டார்களோ அதனை நான் எவ்வாறு ஏற்றுக் கொள்வேன் என்று கூறி விட்டார்கள்.

பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் கலீஃபா ஆன உடன் அன்னாரிடம் சென்று எனது ஸக்காத்தை ஒப்புக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அன்னாரும் அதனை ஒப்புக் கொள்ளவில்லை. மேலும் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களது காலத்திலேயே அன்னாரும் மரணமடைந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 325,326 சஃலபா பின் ஹாத்திப் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

இப்போது இந்த சம்பவத்தைப் பற்றி பார்க்கும்போது நமக்கு தோன்றலாம். ஒரு பக்கம் பத்ர் போர் சஹாபிகள் சொர்க்கத்திற்கு செல்லக் கூடியவர்கள் என்று வருகிறது. மற்றொரு பக்கம் ஸக்காத்து ஒப்புக் கொள்ளப்படாதது குறித்து ஒரு நீண்ட சம்பவம் சென்று கொண்டிருக்கின்றது. எனது உள்ளத்திலும் இதனைப் படித்து இந்த எண்ணம் எழுந்தது. உங்களது உள்ளத்திலும் இந்த எண்ணம் தோன்றி இருக்கலாம். இது எவ்வாறு சாத்தியமாகும். அறிவிப்பு தவறாகும். இது வேறொரு நபரைப் பற்றிய அறிவிப்பாகும் என்று நமக்கு தோன்றுகிறது.

அந்த வகையில் அல்லாமா இப்னு ஹிஜ்ரி அஸ்கலானி அவர்கள் இந்த சம்பவத்தைப் பற்றி கூறியுள்ளார்கள். அவர்களும் தனது கருத்தை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்கள்:

ஒரு சஹாபிடமிருந்து ஸக்காத் பெறுவதற்கும் பெறப்படாமல் இருப்பதற்கும் இந்த சம்பவம் உண்மை என்று நிரூபணமாகி விட்டால் அந்நிலையில் எனது கருத்தின்படி அதனை ஹஸ்ரத் சஃலபா அவர்களின் பக்கம் சுட்டிக் காட்டுவது சரியானதாக இருக்க முடியாது. ஏனென்றால், அன்னார் பத்ர் போர் சஹாபி ஆவார்கள். பத்ர் போர் சஹாபிகளைப் பற்றி இறைவன் தெளிவான மன்னிப்பை அறிவித்து விட்டான். அவர்களிடத்தில் நயவஞ்சகம் மற்றும் வேறு வகையான பலவீனம் இருக்கவே முடியாது.

அல்லாமா ஹிஜ்ரி அஸ்கலானி அவர்கள் எழுதுகின்றார்கள்: இப்னு கல்பி அவர்களின் கூற்றிலிருந்து இந்த விஷயத்தில் உறுதியான வித்தியாசம் தெரிகின்றது. பத்ர் போர் சஹாபி உஹது போரில் ஷஹீதாகி விட்டார். அதனை இந்த சம்பவமும் உறுதி செய்கின்றது. அதாவது இப்னு மர்தவிய்யா அவர்கள் அத்யா அவர்களிடமிருந்து ஆதாரத்துடன் இப்னு அப்பாஸ் அவர்களின் மேற்குறிப்பிட்ட வசனத்தை தமது தஃப்ஸீரில் பதிந்திருக்கின்றார்கள்.

அவர் கூறுகின்றார்: ஒரு நபர் சஃலபா பின் அபீ தாலிப் என்று அழைக்கப்பட்டார். அவர் அன்ஸார்களைச் சார்ந்தவராக இருந்தார். அவர் ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சபையில் வந்து கூறினார். இறைவன் உனக்கு தனது அருளை வழங்கினால் மிக நன்றாக இருக்கும் என்று கூறினார்.

இதுவொரு நீண்ட சம்பவமாகும். ஏற்கனவே இந்த சம்பவம் கூறப்பட்டு விட்டது. இவர் சஃலபா பின் அபீ ஹாத்திப் ஆவார். பத்ர் போர் சஹாபி பற்றி அவர் சஃலபா பின் ஹாத்திப் என்பது தெளிவாக தெரிய வருகிறது. அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த மக்கள் பத்ர் போர் மற்றும் ஹுதைபிய்பா சந்தர்ப்பத்தில் பங்கு பெற்றார்களோ அவர்களில் எந்த முஸ்லிமையும் அல்லாஹ் நரகத்தில் போட மாட்டான்.

மற்றொரு ஹதீஸில் வருகிறது. அல்லாஹ் பத்ர் போர் சஹாபிகளிடம் கூறினான்: நீங்கள் விரும்பியவற்றை செய்யுங்கள். உம்மை நாம் மன்னித்து விட்டோம்.

மேலும் அவர் எழுதுகின்றார்: எவருக்கு இப்படிப்பட்ட அந்தஸ்து கிடைத்திருக்குமோ அவரது உள்ளத்தில் நயவஞ்சகத்திற்கான எண்ணம் எப்படி இருக்க முடியும். உள்ளத்தில் நயவஞ்சம் இருக்குமென்றால் அதற்கு கூலியாக சொர்க்கம் கிடைப்பது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும்.

பின்னர் எழுதுகின்றார்கள்: ஏற்கனவே என்ன இறங்கியதோ அதற்கு மாற்றமாக எப்படி இறங்கும்? அந்த நபர் வேறொருவர் ஆவார்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 1 பக்கம் 516,517 சஃலபா பின் ஹாத்திப் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அதாவது ஹஸ்ரத் சஃலபா அவர்களாக இருந்தார்கள். ஆனால் இந்த சம்பவம் அவரைப் பற்றியதல்ல. அது மட்டுமல்ல. அவர் ஏற்கனவே ஷஹீதாகி இருந்தார். அந்த ஸக்காத் சம்பவத்தில் கூறப்பட்ட நபர் சஃபலா பின் அபீ ஹாத்திப் ஆவார். இப்போது பெயர் ஒன்றாக இருப்பதால் தவறான புரிதல் ஏற்பட்டு விட்டது. எனவே சஃலபா பின் ஹாத்திப் மற்றும் சஃலபா பின் அபீ ஹாத்திப் இருவரும் வேறு வேறு நபர்கள் ஆவர். எனவே ஒரு பத்ர் போர் சஹாபியைக் குறித்து அவர் இப்படிப்பட்ட தரம் தாழ்ந்த செயலைச் செய்தார் என்பது சாத்தியமற்ற ஒன்றாகும். அல்லாஹ் அல்லாமா பின் ஹிஜ்ர் அஸ்கலானி சாஹிபிற்கு நற்கூலி வழங்குவானாக. அவர்கள் இந்த விவகாரத்தை மிகத் தெளிவுபடுத்தி எடுத்துக் கூறி விட்டார்கள். பத்ர் போர் சஹாபியின் வரலாற்று அறிவிப்புகளிலிருந்து வேறு விவரம் கிடைக்கவில்லை.

அடுத்து ஒரு சஹாபி ஹஸ்ரத் சஅது பின் உஸ்மான் பின் கலத் அன்ஸாரி ஆவார்கள். சிலரது பார்வையில் அவரது பெயர் ஸயீது பின் உஸ்மான் ஆகும். பத்ர் யுத்தத்திலும் கலந்து கொண்டார்கள். மேலும் உஹது போரில் எவருடைய பாதங்கள் தடுமாற்றங்கள் அடைந்தனவோ அதில் இவரும் ஒருவர் ஆவார். பின்னர் அல்லாஹ் அவர்கள் அனைவரையும் மன்னித்து திருக்குர்ஆனை இறக்கினான். அன்னார் ஹஸ்ரத் உக்பாவின் சகோதரராக இருந்தார்கள்.

ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹர்ரா என்ற இடத்தில் பூபைர் என்ற இடத்திற்கு வந்தார்கள். அந்த இடம் அவர்களுக்கு சொந்தமான இடமாக இருந்தது. அங்கு அன்னார் தனது மகனான அதாவது அந்த சஹாபி தனது மகன் அபாதாவை மக்களுக்கு தண்ணீர் வழங்குவதற்காக விட்டுச் சென்றார். ஹஸ்ரத் உபாதா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அடையாளம் காணவில்லை. அவர் மிகச் சிறியவராக இருந்தார். தனக்குப் பிறகு ஹஸ்ரத் சஅது அவர்கள் வந்தால் உபாதாவிடம் வரவிருந்த நபரைப் பற்றிய அடையாளங்களைக் கூறி விட்டுச் சென்றார்கள்.

அப்போது ஹஸ்ரத் சஅது அவர்கள் கூறினார்கள். இது தானே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்? அன்னாரை நீர் அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்று கூறினார்கள். செல்லுங்கள். சென்று சந்தித்து விட்ட வாருங்கள் என்று கூறினார்கள். உடனடியாக அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் ஓடினார்கள். அன்னாரிடத்தில் சென்று நின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரின் தலையின் மீது கை வைத்து தடவினார்கள். அவர்களுக்காக துஆ செய்தார்கள். ஹஸ்ரத் சஅது பின் உஸ்மான் மரணிக்கின்ற போது அன்னாரது வயது 80–ஆக இருந்தது.

(காஸி முஹம்மது சுலைமான் மன்ஸூர் பூர் அவர்களால் எழுதப்பட்ட அஸ்ஹாபே பத்ர் என்ற நூல் பக்கம் 148 சஅது பின் உஸ்மான் – 2015 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 263 சயீது பின் உஸ்மான் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 58 சஅது பின் உஸ்மான் பின் ஹுலைத் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஒரு சஹாபி ஆமிர் பின் உமைய்யா ஆவார். ஹஸ்ரத் ஹஷ்ஷாம் பின் ஆமிர் அவர்களின் தந்தை ஆவார். பத்ர் போரிலும் பங்கு பெற்றிருந்தார். உஹது போரில் பங்கெடுத்திருந்தார். பனூ நத்தீ பின் நஜ்ஜார் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 389 ஆமிர் பின் உமய்யா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஹஷ்ஷாம் பின் ஆமிர் அறிவிக்கின்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் உஹது போரில் ஷஹீதானவர்களை அடக்கம் செய்வது பற்றி கேட்கப்பட்டது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெரிய கபரை தோண்டுங்கள். இரண்டு அல்லது மூன்று பேரை ஒரு கபரில் இறக்குங்கள். யாருக்கு திருக்குர்ஆன் அதிகமாக தெரியுமோ அவரை முதலில் இறக்குங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஹஷ்ஷாம் பின் ஆமிர் அறிவிக்கின்றார்கள்: எனது தந்தை ஆமிர் பின் உமைய்யா மற்ற இரண்டு நபர்களை விட முன்பாக கபரில் இறக்கப்பட்டார்கள்.

(சுனன் திர்மிரி, அப்வாபுல் ஃபஸாயிலுல் ஜிஹாது மாஜா ஃபீ தஃபனஷ் ஷஹீது ஹதீஸ் எண் 1713)

ஹஸ்ரத் ஆமிர் அவர்களின் மகன் ஹஷ்ஷாம் பின் ஆமிர் ஒரு முறை ஹஸ்ரத் ஆயிஷா அவர்களிடத்தில் சென்றார். அப்போது உங்களது தந்தை மிகச்சிறந்த மனிதராக இருந்தார்கள் என்று ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் கூறினார்கள். ஆனால் அன்னாருக்குப் பிறகு அன்னாரது சந்ததி தொடரவில்லை.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 12 ஆமிர் பின் உமய்யா (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அம்ர் பின் அபீ ஸர்ஹ் ஒரு சஹாபி ஆவார். வாக்தி அவரது பெயர் முஃமிர் பின் அபீ ஸர்ஹ் என்று கூறியுள்ளார். பனூ ஹாரிஸ் பின் ஃபஹர் கோத்திரத்தைச் சார்ந்தவராக இவர் இருந்தார். அபூ சயீத் அவரது சுட்டுப் பெயராகும். ஹிஜ்ரி 30–ஆம் ஆண்டு ஹஸ்ரத் உஸ்மான் அவர்களது கிலாஃபத் காலகட்டத்தில் மதீனாவில் மரணமடைந்தார். அவரது சகோதரர் ஹஸ்ரத் வஹப் பின் அபீ ஸர்ஹ் அபிஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்தவர்களில் அடங்குவார். இரண்டு சகோதரர்களும் பத்ர் யுத்தத்திலும் பங்கு பெற்றார்கள். பத்ர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் வேறு சில யுத்தங்களிலும் பங்கு பெற்றார்கள். இவர்களின் சந்ததிகள் தொடரவில்லை.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 724,725 உம்ர் பின் அபீ சரஹ் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். அப்போது குல்ஸூம் பின் ஹதம் என்பவரது வீட்டில் தங்கினார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா லா பின் சஅது தொகுதி 3 பக்கம் 311

மஃமர் பின் அபீ சரஹ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பின்னர் ஹஸ்ரத் அஸ்மா பின் ஹுஸைன் ஒரு சஹாபி ஆவார். அவர் பனூ அவ்ஃப் கோத்திரங்களில் ஒன்றான பனூ அவ்ஃப் பின் ஹஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார். அவர்களது சகோதரர் ஹபீல் பின் வபுரா தனது தந்தை மற்றும் வாபுராவின் பக்கம் திரும்பிச் சென்றார்கள். அவரது சகோதரரும் பத்ர் போரில் பங்கு பெற்றிருந்தார். சிலர் அன்னார் பத்ர் போரில் பங்கு பெற்றது தொடர்பாக மாற்றுக் கருத்து தெரிவித்துள்ளனர்.

(காஸி முஹம்மது சுலைமான் மன்ஸூர் பூர் அவர்களால் எழுதப்பட்ட அஸ்ஹாபே பத்ர் என்ற நூல் பக்கம் 177 – 2015 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

ஆயினும் எல்லா நிலையிலும் அவர் பங்கு பெற்றதாகவே சிலர் எழுதியுள்ளனர்.

ஹஸ்ரத் கலீஃபா பின் அத்தீ என்பவருடைய பெயரைப் பற்றி கருத்து வேறுபாடு உள்ளது. சிலர் கலீஃபா பின் அத்தீ என்று எழுதியுள்ளனர். வேறு சிலரோ குலைஃபா பின் அத்தீ என்றும் கூறியுள்ளனர். பத்ர், உஹது இரண்டு போர்களிலும் அவர் பங்கு பெற்றிருந்தார். குலைஃபா பின் அத்தீ பின் அம்ர் பின் மாலிக் பின் அம்ர் பின் மாலிக் அலி பின் பயாஸா ஆகியோர் பத்ர் போர் சஹாபிகளில் அடங்குவர்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 710,711 கலீஃபா பின் அதீ – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது & காஸி முஹம்மது சுலைமான் மன்ஸூர் பூர் அவர்களால் எழுதப்பட்ட அஸ்ஹாபே பத்ர் என்ற நூல் பக்கம் 179 – 2015 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

பத்ர் போருக்கு முன்பாக இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள். எல்லோரையும் விட முதலில் பத்ர் போரில் பங்கு பெற்று பத்ர் போர் சஹாபியாக திகழ்கின்ற பாக்கியத்தை பெற்றார்கள். அதன் பிறகு உஹது போரிலும் பங்கு பெற்றார்கள். உஹது போருக்குப் பிறகு அவரது பெயர் மறைவாகவே இருந்து வந்துள்ளது. வெளிப்படையாக எங்கும் கிடைக்கவில்லை. மேற்படி விவரம் அவரைப் பற்றி ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் கிடைக்கின்றது. ஒரு நீண்ட காலம் இவர்களைப் பற்றிய எந்த செய்தியும் இல்லாமல் உள்ளது.

மீண்டும் ஹஸ்ரத் அலி அவர்களுடைய கிலாஃபத் காலகட்டத்தில் நடைபெற்ற அனைத்து போர்களிலும் இவர்களும் ஹஸ்ரத் அலி அவர்களுடன் பங்கு பெற்றுள்ளார்கள். அவர் மரணமடைந்து ஆண்டு குறித்து அவரது வாழ்க்கை வரலாற்று புத்தகத்தில் ஒன்றும் கிடைக்கவில்லை.

(தாலிப் ஹாஷ்மீ அவர்கள் எழுதிய ஹபீபே கிப்ரிய்யா கே தீன் சவ் அஸ்ஹாப் என்ற நூல் பக்கம் 221 – 1999 ஆம் ஆண்டு லாஹூரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மஆஸ் பின் மாஸான் பேரே மவூனா சம்பவத்தில் ஷஹாதத் நிகழ்ந்தது. அன்னாரின் தந்தையார் பெயர் மாயிஸ் என்று வருகிறது. அவர் ஹஸ்ரஜ் கோத்திரமான ஸர்க்கி என்ற கோத்திரத்தைச் சார்ந்தவர் ஆவார். சில அறிவிப்புகளின்படி பத்ர் மற்றும் உஹது போர்களில் பங்கு பெற்றார். பேரே மவூனா சந்தர்ப்பத்தில் ஷஹீதாக்கப்பட்டார். ஓர் அறிவிப்பின்படி அன்னார் பத்ர் போரில் காயமுற்றிருந்தார். சிறிது காலத்திற்குப் பிறகு அதே காயத்தின் காரணமாக அவர் மரணமடைந்தார்.

(அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 196 மஆஸ் பின் மாயிஸ் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அன்னாருடன் அன்னாரது சகோதரர் ஆயிஸ் பின் மஅஸ் அவர்களும் பத்ர் யுத்தத்தில் பங்கு பெற்றார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 147 ஆயிஸ் பின் மாயிஸ் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

சில காலம் கழிந்து இதே காயத்தின் காரணமாக அன்னார் மரணமடைந்தார்கள். அன்னாருடன் அவரது சகோதரர் ஆயிஷ் பின் மஅஸ் அவர்களும் பத்ர் போரில் பங்கு பெற்றார்கள்.

ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பிறகு அயீனா பின் ஹஸன் அவர்கள் கஸ்ஃபான் கோத்திரத்துடன் காடுகளுக்கு கால்நடைகளை மேய்க்கச் சென்றார்கள். அப்போது அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒட்டகத்தின் மீது தாக்குதல் நடத்தினார்கள். பாதுகாப்பு பணியிலிருந்து ஒருவரைக் கொலை செய்து ஒட்டகங்களை கைப்பற்றி விட்டுச் சென்று விட்டனர். ஷஹீதான ஒருவரின் மனைவியையும் கடத்திச் சென்று விட்டார்கள். அப்போது இந்த சம்பவம் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தகவல் கிடைத்தது. எதிரிகளை பிடித்து வர ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எட்டு சவாரிகளில் அனுப்பி வைத்தார்கள். அந்த எட்டு சவாரிகளில் ஹஸ்ரத் முஆஸ் பின் மஅஸ் அவர்களும் அடங்குவார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் ஓர் அறிவிப்பு இவ்வாறும் வருகிறது. அந்த எட்டு சவாரிகளில் ஹஸ்ரத் அபூ அய்யாஷ் அவர்களும் அடங்குவார். அனுப்பி வைப்பதற்கு முன்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ அய்யாஷ் அவர்களிடம் கூறினார்கள்: நீங்கள் உங்களுடைய குதிரையை வேறு ஒருவருக்கு கொடுத்து விடுங்கள் என்று கூறினார்கள். அந்த நபர் உம்மை விடச் சிறந்தவராக இருக்க வேண்டும். அதற்கு அபூ அய்யாஷ் அவர்கள் கூறினார்கள்: அப்போது நான் மிகவும் கவலைக்குள்ளாகி விட்டேன். ஏனென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: நீர் உமது குதிரையை கொடுத்து விட்டால் அது சிறந்ததாக இருக்கும். ஆனால் இவர்களில் சிறந்தவராக நான் இருக்கிறேன் என்று கூறிக் கொண்டிருந்தேன்.

பின்னர் பனூ ஸரீகின் கருத்து என்னவென்றால், இதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அய்யாஷ் அவர்களின் குதிரையின் மீது முஆஸ் பின் மாஸியா, ஆயில் பின் நாஸ் அவர்களையும் சவாரியில் அமர்த்தினார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 486.... – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாரே இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅது பின் சயீ அல்அஷ்அரி ஒரு சஹாபி ஆவார். பனூ அப்துல் அஷ்அரி என்ற கோத்திரத்தோடு தொடர்புடையவராக இருந்தார். பத்ர் போரிலும் பங்கு பெற்றார். சிலரது எண்ணத்தின்படி பைஅத்தே உக்பாவிலும் அவர் கலந்து கொண்டிருந்தார். பத்ர் மற்றும் உஹது மற்றும் அகழ் போர் உட்பட அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டிருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரின் மூலமாகவே பனூ குரைழாவின் கைதிகளை அனுப்பி வைத்தார்கள். அன்னார் அதற்குப் பகரமாக நஜது என்ற இடத்தில் குதிரைகளையும் ஆயுதங்களையும் வாங்கினார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 217,218 சஅது பின் ஸைது பின் மாலிக் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் பின் ஸைது அவர்கள் ஒரு நஜ்ரானி வாள் ஒன்றை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பரிசாக அளித்தார்கள். அன்னார் அந்த வாளை ஹஸ்ரத் முஹம்மது பின் முஸ்லிமா அவர்களுக்கு வழங்கி விட்டார்கள். இதனை கொண்டு அல்லாஹ்வின் வழியில் ஜிஹாது செய்யுங்கள். எப்போது மக்கள் தங்களுக்கிடையே கருத்து வேறுபாடு கொள்வார்களோ அப்போது நீங்கள் இதனை கையில் அடித்து உதைத்து விடுங்கள். பின்னர் வீட்டினுள் நுழைந்து விடுங்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 216 சஅது பின் ஸைது அல்அஷ்ஹலி – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

அதாவது எவ்வகையான குழப்பத்திலும் ஃபஸாதிலும் பங்கு பெறாதீர்கள் என்று கூறினார்கள்.

இந்த விஷயங்களின்படி ஒருவருக்கொருவர் கழுத்தை வெட்டிக் கொண்டிருக்கின்ற முஸ்லிம்களும் நடக்க அல்லாஹ் அருள் செய்வானாக. மேலும் உலகில் அமைதி நிலைபெறட்டுமாக. அல்லாஹ் இந்த சஹாபாக்களின் அந்தஸ்துகளை உயர்த்திக் கொண்டே செல்வானாக. மேலும் நன்மைகள் செய்வதற்கும் தியாகங்கள் செய்வதற்கும் கலப்பற்ற தன்மையுடனும் நன்றியுணர்வுடனும் நமது வாழ்வை கழிப்பதற்கு அல்லாஹ் நமக்கு நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன்

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 03-10 January 2019 Issue No. 1-2

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி…)*

முஸ்லிம்களாக ஆக்கியதில் நான் சன்மானம் பெற தகுதியுள்ளவனாய் இருக்கிறேன். சிலுவைகளை உடைத்தேன் என்றெல்லாம் அவர் கூறியிருக்க வேண்டும். நான் ஏதும் அறியேன் என்று ஈஸா கூறுவது பெரும் பொய்யாகி விடும்.

சுருக்கமாக, முதல் மஸீஹ் மீண்டும் உலகிற்கு வரமாட்டார் என்பதை இத்திருவசனத்தின் மூலம் அவர் மிக தெளிவாக ஒப்புக் கொண்டிருக்கிறார். மேலும், அவர் மரணமடைந்து விட்டார் என்பதே உண்மையாகும்.☆

மேலும் ஸ்ரீநகர் முஹல்லா கான்யாரில் அவரது கல்லறை இருக்கிறது. இனி☆ இறைவன் தானாக இறங்கி வருவான். சத்தியத்தோடு போர் புரியும் மக்களை எதிர்த்து அவனே போர் புரிவான். இறைவன் சண்டை செய்வதென்பது ஆட்சேபத்திற்குரியதொன்றல்ல. ஏனெனில் அது அடையாளங்களைக் கொண்டதாய் அமைந்திருக்கும். ஆனால் மனித சண்டை செய்வதோ ஆட்சேபனைக்குரியதாகும். ஏனெனில் அது பலவந்தத்தைக் கொண்டதாகும்.

**(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 75–77)**

☆ அடிக்குறிப்பு 1:– தெற்கு இத்தாலியில் மிகவும் பிரசித்திபெற்ற கரெய்யர் டலாஸீரா என்ற பெயருள்ள ஓர் ஏடு ஆச்சரியமான செய்தியொன்றை பிரசுரித்திருக்கிறது. 1879 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் தேதி ஜெரூஸலத்தில் குர்மரா என்ற பெயருள்ள ஒரு வயோதிக சன்னியாசி ஒருவர் தனது வாழ்நாளில் புகழ்பெற்ற இறைநேசராக இருந்தார். அவர் தனக்குப் பின் சில சொத்துக்களை விட்டுப் போனார். அந்நாட்டு ஆளுனர் அவருடைய உறவினர்களைத் தேடிப்படித்து இரண்டு லட்சம் பிரேங்க் (அதாவது 1,18,750 ரூபாய்) அவர்களிடம் ஒப்படைத்தார்.

இதில் பல நாடுகளின் நாணயங்களும் இருந்தன. அச்சன்னியாசி நீண்ட காலமாக இருந்து வந்த குகையிலிருந்து இவை பெறப்பட்டன. மேலும் அப்பணத்துடன் சில காகிதங்களும் அந்த உறவினர்களுக்குக் கிடைத்தன. ஆனால் அவற்றை அவர்களால் படிக்க முடியவில்லை.

இப்ரானி மொழி அறிந்திருந்த சில பண்டிதர்களுக்கு அக்கடிதங்களை வாசிக்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. அக்கடிதங்கள் மிகவும் பழமையான இப்ரானி மொழியில் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் அவற்றை படித்த போது அவற்றில் பின்வரும் வாக்கியங்கள் இடம்பெற்றிருந்தன.

மர்யத்தின் குமாரரான மஸீஹ் (இயேசு)வின் ஊழியனும் மீனவருமாகிய பேதுரு என்கிற நான் இறைவனது நாமத்திலும் அவனது விருப்பத்தின்படியும் கூறுகிறேன் எனத் தொடங்கும் அக்கடிதம் பின்வருமாறு முடிவடைகிறது.

பேதுரு மீனவனாகிய நான் மஸீஹ் (இயேசு)வின் பெயரில் எண் 90 வது வயதில் எனது எஜமானனும் தலைவனுமாகிய மர்யத்தின் குமாரனாகிய யஸூஹ் மஸீஹ் (இயேசு மஸீஹ்) உடைய மரணத்திற்கு மூன்று ஃபஸஹ் பெருநாளைக்குப் பின் (மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர்) இறைவனுடைய பரிசுத்த வீட்டுக்கு சமீபம் போலீர் என்னும் இடத்தில் இந்த அன்பு நிறைந்த சொற்களை எழுத முடிவு செய்தேன்.

இக்குறிப்பு பேதுருவின் காலத்திலுள்ளவை என அப்பண்டிதர்கள் முடிவு செய்துள்ளார்கள். லண்டன் பைபிள் ஸொஸைட்டியின் கருத்தும் இதுவேயாகும். அவற்றை நன்றாய் பரிசோதித்த பின்னர் பைபிள் ஸொஸைட்டி இதற்கு நான்கு லட்சம் லேரா அதாவது 2,37,500/– அதன் உரிமையாளருக்குக் கொடுத்து அக்கடிதங்களை வாங்க விரும்பியது. மர்யத்தின் குமாரரான இயேசு (இவ்விருவர் மீது சலாம் உண்டாவதாக) அவர் கூறியதாவது.

என் இறைவா! நான் எதனை தீமையாகக் கருதுகின்றேனோ அதனை வெல்லுவதற்கு நான் தகுதியுள்ளவன் அல்லன். மேலும் நான் விரும்பிய நன்மையை என்னால் பெறமுடியவில்லை. ஆனால் மற்றவர்கள் தங்களது பிரதிபலனைத் தங்களது கரங்களிலேயே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் நான் அவ்வாறு இல்லை. ஆயினும் எனது பெருமை எனது வேலையிலேயே இருக்கிறது. என்னைவிட மோசமான நிலையிலுள்ள வேறொரு மனிதன் இல்லை. இறைவா! எல்லோரையும் விட உன்னத நிலையில் இருந்து வரக்கூடிய நீ எனது பாவத்தை மன்னித்தருள்வாயாக.

இறைவா! நான் எனது பகைவர்களின் குற்றச்சாட்டுகளுக்கு காரணமுள்ளவனாய் இருக்குமளவுக்கு நீ என்னை ஆக்கிவிடாதே! நீ என்னை எனது நண்பர்களின் பார்வையில் இழிவுள்ளவனாய் ஆக்கிவிடாதே! எனது இறையச்சம் என்னைத் துன்பங்களில் ஆழ்த்தி விடக்கூடாது. இந்த உலகமே எனது பெரும் ஆசைக்குரிய இடமாகவும் எனது குறிக்கோளாகவும் ஆக்கிவிடாதே! மேலும் என்மீது கருணை காட்டாத மனிதனை என்மீது ஆதிக்கம் செலுத்துபவனாக ஆக்கிவிடாதே!

கருணைக்கடலான என் இறைவா! உனது கருணைக்காக வேண்டி நீ அவ்வாறே செய்தருள்வாயாக. மேலும் நீயோ உனது கருணை தேவைப்படக்கூடிய அனைவர் மீதும் கருணை காட்டக்கூடியவனாய் விளங்குகின்றாய்.

அடிக்குறிப்பு 2:– ஸ்ரீநகரில் இருக்கும் கல்லறையானது யூதர்களின் நபிமார்களின் கல்லறை போன்று உண்டாக்கப்பட்டிருப்பதாக ஒரு யூதரும் அதை உறுதிப்படுத்திக் கூறியுள்ளார்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து…**

“நீங்கள் இறை படைப்பினங்களுடன், அவர்களது உண்மையான உறவினர் போன்று அனுதாபத்துடன் பழகுங்கள். தாய் தனது பிள்ளைகளுடன் பழகுவதைப் போன்று பழகுங்கள்.”

(கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19, பக்கம் 30)

**ஃபைஸல் ஹமீது இலாஹி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad